Registered as a News paper · பக்கங்கள் 10 · விலை 07/=

# ஈழநாதம்

Eezhanatham

மட்டக்களப்பு பதிப்பு · மக்கள் நாளிதழ்




நாதம் 01 · திருவள்ளுவர் ஆண்டு 2035 · தை 17 · 30.01.2005 ஞாயிற்றுக்கிழமை · ஓசை 234

# அன்ரன் பாலசிங்கம் லண்டன் திரும்பினார்

# படைத் தளபதிகள் வழி அனுப்பி வைத்தனர்



(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மற்றும் அவரது துணைவியாரான அடேல் பாலசிங்கம் ஆகியோர் நேற்று லண்டன் நோக்கி பயணமாகியுள்ளனர்.**

தாயக நேரப்படி பிற்பகல் 3.00 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து உலங்குவானூர்தி மூலம் கொழும்பு நோக்கி சென்றனர்.

இவர்களைத் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் மற்றும். மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு, திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், கேணல் தீபன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, மாலதி படையணி சிறப்பு தளபதி கேணல் விதுசா, தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## பட்டிருப்பு பாடசாலையிலிருந்த மக்கள் களுவாஞ்சிகுடி மைதானத்திற்கு மாற்றம்

### அடிப்படை வசதியில்லையென விசனம்

(எஸ்.ரவீந்திரன்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு களுவாஞ்சிகுடி பட்டிருப்பு தேசிய பாடசாலை நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த பொது மக்கள் அனைவரும் எதுவித முன்னறிவிப்பும் இல்லாமல் நேற்று இரவு 7.45 மணியளவில் வெளியேற்றப்பட்டமை மனவேதனைக்குரியதாகுமென பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, நாளை பாடசாலையினை உடன் ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காகவே எதுவித அடிப்படை வசதிகளுமற்ற களுவாஞ்சிகுடி

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## சுனாமிக்கு பின் புதுக்குடியிருப்பு ஆழ்கடலில் மீன்பிடித் தொழில்

(தனஞ்ஷயன்)

சுனாமி பேரலை அனர்த்தத்தின் பின்பு நேற்று புதுக்குடியிருப்பு ஆழ்கடல் மீனவர்கள் முதன் முதலாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

சுனாமியினால் கடல் வள்ளம், இயந்திரப் படகுகள் வலை, என்பன பாதிப்புற்ற வேளையிலும் இக்கிராம மீனவர்கள் தங்களது இயல்பு வாழ்வாதாரத் தொழிலினை செய்வதில் ஆர்வமுடன் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரைகள் நாளை ஆரம்பம்

(நமது நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களுக்குமான விரிவுரைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ். ரவீந்திரநாத் தெரிவித்தார்.

எனவே அனைத்து மாணவர்களையும் சமூகம் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நிவாரண அட்டை வழங்கலில் அநீதி பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

(வி.ரி.சகாதேவராஜா)

சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாறை கரையோரப் பிரதேசத்தில் பிரதேச செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ள நிவாரண அட்டைகளில் பிரதேசத்திற்குப் பிரதேசம் பாரிய வேறுபாடும், பாகுபாடும் காணப்படுகிறது.

சில பிரிவுகளில் உயிரிழப்புகளுக்கு ஒரு அட்டையும், வீடு முற்றாக பாதிப்புக்கு ஒரு அட்டையும், உடைமை பாதிப்புக்கு ஒரு அட்டையும், தண்ணீர் வந்து போனமைக்கு ஒரு அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

சில பிரிவுகளில் ஒரு பிரதேசத்திற்குள் வரும் அனைவருக்கும் ஒரு அட்டை அதனை அண்டிய பிரதேசத்திற்கு ஒரு அட்டை ஏனைய பிரதேசத்திற்கு ஒரு அட்டை என்று வழங்கப்பட்டுள்ளது.

கடற்கரையோரத்தில் உயிரிழந்து , வீடு முற்றாக தரைமட்டமாகிய ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்ட அட்டையும், 350 மீற்றருக்கு அப்பால் தண்ணீரே வராத குடும்பத்திற்கு வழங்கப்பட்ட அட்டையும் ஒன்றாக இருப்பது மக்கள் மத்தியில் பலத்த ஆத்திரத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## நிந்தவூர் வைத்தியசாலையை இருந்த இடத்தில் இயங்கச் செய்யவும்

### நேற்று மக்கள் ஆர்ப்பாட்டம்

(நமது நிருபர்)

நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையை புனரமைக்குமாறு கோரி அகதி முகாம்களில் தங்கியுள்ள பல நூற்றுக்கணக்கான மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கடற்கரையை அண்மித்த பகுதியிலுள்ள இந்த வைத்தியசாலையை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்வதாகவும் இதனை ஆட்சேபித்தே இந்த போராட்டத்தில் இறங்கியுள்ளதாகவும் அவர்களால் கோரிக்கை முன்வைக்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## புதுக்குடியிருப்பு பாடசாலை நாளை முதல் இயங்கும்

(தனஞ்ஷயன்)

கடந்த டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமி அலையின் காரணமாக இதுவரை காலமும் சமூக நலன்புரி நிலையமாக செயற்பட்டு வந்த புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் இயங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் வே.தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

## கல்முனை வலயத்தில் 861 மாணவர் சுனாமியால் பலி!

### தாயை இழந்தவர் 775 பேர்; தந்தையை இழந்தவர் 484

(வி.ரி.சகாதேவராஜ)

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் கல்முனை வலயத்தைச் சேர்ந்த 861 மாணவர் பலியாகியுள்ளதாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ. அப்துல்நிசாம் தெரிவித்தார்.

2686 மாணவர் காயமுற்றுள்ளதாகவும் தெரிவித்தார். இவ்வனர்த்தத்தில் 28 மாணவர் தாய், தந்தை இருவரையும் இழந்துள்ளனர் என்ற அதிர்ச்சி தரும் செய்தியையும் அவர் வெளியிட்டார்.

தாயை இழந்த மாணவர் 775 பேர், தந்தையை இழந்த மாணவர் 484 பேர் என்று கூறும் பணிப்பாளர் 7833 மாணவர்கள் வீடுகளை இழந்துள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர் பலியானதில் கூடு

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## இன்றைய நாளில்

**மகாத்மா காந்தி**

**02.10.1869-30.01.1948**



பிரித்தானியருக்கெதிராக அகிம்சைவழியில் இந்திய சுதந்திரப் போரை முன்னெடுத்தவர். அகிம்சைத் தத்துவத்தை உலகிற்குக் கொடுத்தவர். இவர் எழுதிய சுயசரிதை நூலான சத்திய சோதனை பிரபல்யமானது. முஸ்லிம்களுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார் என்று குற்றம் சுமத்திய ஒரு இந்து வெறியனால் மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார்.

# செய்தித் துளிகள்

## கூடார அமைப்பு

(காத்தான்குடி நிருபர்)

சுனாமி கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளாகி சுமார் 2,800 உயிர்களை காவு கொண்ட மருதமுனைக் கிராமத்திற்கு முன்னால் பிரதி அமைச்சரும் விமான சேவைகள் விமான நிலைய நிறுவன தலைவருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஒரு தொகை கூடாரங்களை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை மாற்றம்

(எஸ்.சசி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்லடி மக்கள் தற்போது மட்.விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ளதால் இப்பாடசாலை இதுவரை திறக்க முடியாத நிலையில், சிவானந்தா வித்தியாலயத்தில் மாலை நேர பாடசாலையாக இயங்கி வருகின்றது.

சிவானந்தா வித்தியாலய மாணவர்களுக்கான பாடசாலை முற்பகல் வேளைகளில் நடைபெற்றதும், பிற்பகல் விவேகானந்தா மகளிர் வித்தியாலய மாணவர்களுக்கான பாடசாலை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆர்ப்பாட்டம்

(நமது நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் தமிழ் தேசியப் பேரவையும் பொது மக்களும் இணைந்து அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரவையொன்றை நடாத்தினர்.

போர்க் காலத்தில் இராணுவத்தினரால் ஏற்பட்ட அடாவடித் தனத்தையிட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்திற்கு முழுமையான நிவாரணப் பணிகள் கிடைக்காமையிட்டு மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தினர். இதில் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முதன்மைச் சித்தி

(எஸ்.சசி)

பட்டிப்பளைக் கல்விக் கோட்டத்திலுள்ள மட். முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடிப்படை ஆங்கில அறிவுக்கான விசேட வகுப்புக்கள் நடைபெற்றதன் பின்னர் இறுதிப்பரீட்சையில் மாணவர்கள் நூறு வீதம் சித்தியடைந்துள்ளார்கள்.

இவ்வகுப்புக்கள் மட்.முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம், மட்.அரசடித்தீவு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் மட். அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு நடாத்தப்பட்டது.

இதில் முதன்மைச் சித்தியடைந்த பாடசாலையாக மட். முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயத்தையே குறிப்பிடலாம்.

## பாடசாலை திருத்தியமைக்க 361 மில்லியன் தேவை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சேதமடைந்த பாடசாலைகளை திருத்தியமைத்து வழமையான நிலைக்கு கொண்டு வருவதற்கு 361 மில்லியன் ரூபா நிதி தேவைப்படும் என மட்டக்களப்பு மாவட்ட மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எம்.பவளகாந்தன் தெரிவித்தார். இம்மாவட்டத்தில் முற்றாக 12 பாடசாலைகள் சேதப்பட்டிருப்பதோடு மற்றும் சில பாடசாலைகள் பகுதியாகவும் சேதமாக்கப்பட்டிருக்கின்றது. கட்டட நிர்மாணம் தளபாடங்கள், உபகரணப் பொருட்கள் போன்றவற்றை நிவர்த்தி செய்ய மேற்குறிப்பிட்ட நிதி தேவையாகும். இது தொடர்பாக கல்வியமைச்சிக்கு ஏற்கனவே அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் இதற்கு எவ்விதமான நிதி ஒதுக்கீடுகளும் இதுவரை செய்யப்படவில்லை. இதனால் சேதமடைந்த பாடசாலை மாணவர்களுக்கு மாலை நேர வேளைகளில் சில பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# சுனாமியால் உயிரிழந்த வெளிநாட்டவர்களின் சடலங்கள் புதைகுழியிலிருந்து மீட்பு

(நமது நிருபர்)

சுனாமிப் பேரலையால் உயிரிழந்த வெளிநாட்டவர்களின் சடலங்களைத் தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த சில தினங்களாகப் புதைக்கப்பட்ட நிலையிலிருந்த வெளிநாட்டவர்களின் சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன.

மாத்தறை தெல்வத்தைப் பகுதியில் வெளிநாட்டவர்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் புதை குழியொன்று நேற்று தோண்டப்பட்டதாக தென்மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் பிரபாய்சிங்க தெரிவித்தார். புதை குழி தோண்டும் போது சர்வதேச பொலிஸாரும் உடன் இருப்பார்களென உதவிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களின் சடலங்களைப் பொலிசாருக்கு அறிவிக்காமல் புதைத்து விட்டதால் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

# ஏறாவூரில் நுளம்புத் தாக்கத்தினால் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம்

(நமது நிருபர்)

ஏறாவூர் பிரதேசத்தில் தற்போது நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளதால் டெங்குக் காய்ச்சல் மற்றும் மலேரியா போன்ற நோய்களும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக மருத்துவ சுகாதார அதிகாரி டாக்டர் ஏ.இக்பார் அறிவித்துள்ளார் இதனால் சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்குமாறு பொது மக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர். அபாயகரமான நோயிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் சுகாதாரப் பிரிவினர் ஏறாவூர் நகரின் பிரதேச சபையுடன் இணைந்து இரண்டு நாட்கள் சிரமதானப் பணியினை ஆரம்பித்துள்ளனர். இதற்காக 16 உழவு இயந்திரங்கள் மற்றும் கூலியாளர்கள் நூறு பேரும் பயன்படுதப்பட்டுள்ளனர். ஏறாவூர் முஸ்லிம் பிரதேசங்களில் உள்ள அனைத்து இடங்களும் துப்பரவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டு போதனா வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு

(நமது நிருபர்)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எம்.தேவராஜன் தெரிவித்துள்ளார். வைத்தியசாலைக்கு பலதரப்பட்ட மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ள போதிலும் சுனாமியால் ஏற்பட்ட காயங்களை குணமாக்கும் ஊசி மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சாய்ந்த மருதுப் பிரதேசத்தில் விரைவில் மீள்கட்டுமானப் பணிகள்

(அஸ்லாம் எஸ்.மௌலான)

சுனாமி கடல் பேரழிவினால் பேரழிவுக்குள்ளாகியிருக்கின்றது. சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் மீள் கட்டமைப்புப் பணிகளை துரித கதியில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாய்ந்தமருது ஜும்-ஆப் பள்ளிவாயலைத் தளமாகக் கொண்டு இயங்குகின்ற "சுனாமி அனர்த்த முகாமைத்துவ சபை" இது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு முக்கிய தீர்மானங்களையும் எடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு பள்ளிவாயலில் நடைபெற்ற கூட்டத்தில் வீடு வாசல்களை இழந்தவர்களுக்கு தற்காலிக, நிரந்தர வீடுக்களை அமைத்துக் கொடுத்தல், புதிய வைத்தியசாலை நிர்மாணம், வீதிகள் பாலங்கள் புனரமைப்பு, மின்சார சீரமைப்பு, பாடசாலைகளை மீளமைத்தல் போன்றவை குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

கடல் சீற்றத்தால் அழிவுற்றிருக்கின்ற சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையை பிரதான வீதியில் அமைந்துள்ள தாமரை விளையாட்டுமைதானத்தில் நிர்மாணிப்பது எனவும், அதுவரை அவ் வைத்தியசாலையைத் தற்காலிகமாக சின்னப் பள்ளிவளவில் அமைப்பது எனவும் சுனாமி அனர்த்த முகாமைத்துவ சபை தீர்மானித்துள்ளது.

தற்போது வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு சின்னப்பள்ளி வாயலில் அமைந்துள்ள ஹிப்லுல் குர்-ஆன் அறபுக் கல்லூரியில் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட மாவட்ட வைத்தியசாலை இருக்குமிடத்தை விளையாட்டு மைதானமாக மாற்றியமைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கம் தடை செய்துள்ள 300 மீற்றருக்கு அண்மித்த பகுதியில் தொடர்மாடி வீட்டுத்திட்டங்களை அமைப்பதன் மூலம் வீடு, வாசல்களை இழந்தவர்களுக்கு நிவாரணமளிக்க முடியும் என்ற ஆலோசனை குறித்தும் பரிசீலிக்கப்பட்டுள்ளது. அல்லது சாய்ந்தமருதின் மேற்புறமாக அமைந்துள்ள கரைவாகுப்பற்றுப் பகுதியில் வீடுகளை நிர்மாணிக்கலாம் எனவும், இது தொடர்பில் வீடமைப்பு அமைச்சர் பேரியல் அஷ்ரப்புடன் கலந்துரையாடி இறுதி முடிவை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கடல்ப் பேரலை அனர்த்தத்தால் தொழில் இழந்து நிர்க்கதியாகியிருக்கின்ற மீனவர்களுக்கு உடனடியாகத் தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் கூட்டத்தில் வலிறுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மீனவர்கள், இழப்புக்கள் பற்றிய விபரங்கள் சேகரிக்கும் பணிகள் பூர்த்தியடைந்ததும், அவர்களுக்குப் படகுகள், தோணிகள், மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு துரித நடவடிக்கை எடுப்பது என சுனாமி அனர்த்த முகாமைத்துவ சபை தீர்மானித்தது.

பாதிக்கப்படாத பாடசாலைகளைத் திறப்பதற்கு வசதியாக அங்கிருக்கும் அகதிகளை வேறு இடங்களில் தற்காலிகமாக வேறு இடங்களில் குடியமர்த்துவது குறித்தும் ஆராயப்பட்டது. ஸாஹிறா தேசிய கல்லூரி, மஹ்முத் மகளிர் கல்லூரி, அல்ஹிலால் வித்தியாலயம், ஜீ. எம்.எம்.வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளிலும் அமைந்துள்ள அகதி முகாம்களை அல்கமறூன் வித்தியாலயத்தில் ஒன்று சேர்ப்பதோடு, புளிவட்டான் பள்ளிவாயல், எம்.பி.சீ. எஸ்.களஞ்சியசாலை வளவு போன்ற இடங்களில் கொட்டில்கள், கூடாரங்கள் அமைத்து மக்களைக் குடியமர்த்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அனுசரணையுடன் சாய்ந்த மருது பிரதேச செயலகம் மேற்கொள்ளும், இவ்வாறு அமைக்கப்படுகின்ற அகதிகள் நலன்புரி நிலையங்களுக்கு சுத்தமான குடி நீர், மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது. சேவைகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளுவது என அனர்த்த முகாமைத்துவ சபை தீர்மானித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரம், வீதிகள், பாலங்கள் போன்றவற்றை புனர்நிர்மானம் செய்வது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இவ்விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளது. இப் பகுதிகளில் மீட்புப் பணிகளும் சுத்திகரிப்பு வேலைகளும் இன்னும் பூர்த்தியடையவில்லை. ஆகையால் அவற்றை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் உணரப்பட்டிருக்கின்றது. அதற்கான முயற்சிகளிலும் இந்த முகாமைத்துவ சபை ஈடுபட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் ஒத்துழைப்பை முழுமையாகப் பெற்றுக் கொள்வது பற்றியும், அரசியல் வாதிகளின் கூட்டிணைந்த பங்களிப்பை அடைந்து கொள்வது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

மக்களுக்கான நிவாரண உதவிகள், மீட்புப் பணிகள், சுத்திகரிப்பு வேலைகள், புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகள் உள்ளிட்ட அனைத்து வேலைத் திட்டங்களுக்கும் அரச உயர் அதிகாரிகளினதும், அரசியல் வாதிகளினதும் கொள்கை உடன்பாடுடனான ஆதரவும், ஒத்துழைப்பும் மிக அவசியம் என உரையாடப்பட்டுள்ளது.

சுனாமி கடல் பூகம்பப் பேரலைகளினால் இலங்கையில் மிகப் பெரியளவில் பாதிப்புக்குள்ளான ஒரு தனிப் பிரதேசம் சாய்ந்தமருதுக் கிராமமாகும். எனினும் இலத்திரனியல் ஊடகங்களில் சிறியளவிலேனும் சாய்ந்தமருது பேரளிவுகளுக்கு முக்கியத்துவம் கிடைக்கவில்லை என்பது இப்பகுதி மக்களின் அங்கலாய்ப்பாகும்.

சாய்ந்தமருதில் மூன்றில் ஒரு பகுதி கடலுக்கு இரையாகி விட்டது. இங்கு மூவாயிரத்திற்கு மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். 3062 பேர் காயமடைந்திருக்கின்றனர். 3278 வீடுகள் முற்று முழுதாக அழிந்து விட்டன. 485 வீடுகள் பகுதியாக சேதமடைந்துள்ளன. 14361 பேர் ஆறு நலன்புரி நிலையங்களில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் உறவினர் வீடுகளில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

இயற்கையின் சீற்றத்தினால் சீரழிந்திருக்கின்ற சாய்ந்தமருது பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காகவும் என அமைக்கப்பட்டிருக்கின்ற சுனாமி அனர்த்த முகாமைத்துவ சபை தனது பயணத்தை ஆரம்பித்து விட்டது. அது உரிய இலக்கை அடைவதற்கு சகல தரப்பினரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குவது அவசியமாகும்.

அரசாங்கத்தினதும், அரசசார்பற்ற நிறுவனங்களினதும் உதவிகளை இயன்றளவு கூடுதலாகப் பெற்று, உரிய வேலைத்திட்டங்களை முறையாக மேற்கொள்வதற்கு மேற்படி சபை எடுத்து வருகின்ற ஆக்க பூர்வமான முயற்சிகள் முழுமையான வெற்றியைத் தர வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.

# மட்டு மாவட்டத்தில் மீள் புனரமைப்பு பணியில் பொது மக்கள் ஈடுபடல்

(நமது நிருபர்)

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களின் இடிபாடுகளை அகற்றி மீள் புனரமைப்புப் பணிகளில் பொது மக்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றார்கள்.

புது முகத்துவாரப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த வீடுகளை அகற்றி மீளக்கட்டமைக்கும் நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டுள்ளார்கள். மட்டக்களப்பு மாநகர சபையினர் கனரக வாகனங்களைக் கொண்டு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட திருச்செந்தூர் பிரதேச இடிபாடுகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேவேளை பாலமுனைப் பகுதியில் சேதமுற்ற வீடுகளின் உரிமையாளர்கள் தமது வீடுகளைத் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள், காத்தான்குடி மக்களும் பாதிக்கப்பட்ட தமது வீடுகளைப் புனர்நிர்மானம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள், இதே வேளை சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தின் பாண்டிருப்புக் கிராமத்தை மீளக் கட்டியெழுப்பும் பணிகளில் தற்போது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு அமைப்புக்கள் விடுதலைப்புலிகளும் ஈடுபட்டு வருகின்றார்கள், கனரக வாகங்களின் உதவியுடன் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## களுதாவளை பகுதியில் அகதிகளின் கூடாரங்கள் விசமிகளால் அபகரிப்பு.

(நிசாந்)

களுதாவளைப் பிரதேசத்தில் அகதிகளின் கூடாரங்களை இனந்தெரியாத விசமிகள் சிலர் அபகரித்துச் சென்றுள்ளதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

களுதாவளைப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு களுதாவளை இராமகிருஷ்ணமிசன் பாடசாலையில் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட சுனாமி வதந்தியால் இவ் அகதிமுகாமை விட்டு அகதிகள் ஓடிவந்த வேளையிலேயே இக் கூடாரங்கள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

களுதாவளைப் பிரதேசத்தில் சுனாமியால் தமது வீடு வாசல்களையும் சொத்துக்களையும் இழந்து அகதிமுகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் நாளை திங்கட்கிழமை முதல் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதால் கூடாரங்கள் அமைத்து அவர்களை வேறு இடங்களில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பேரூந்து சேவையை சீரான முறையில் நடாத்துமாறு பயணிகள் கோரிக்கை

(நமது நிருபர்)

மட்டக்களப்பிலிருந்து மண்முனைத் துறை வரையிலான பேருந்துச் சேவையினை சீரான முறையில் நடாத்துமாறு காத்தான்குடி நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி நிர்வாகத்திடம் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின் படுவான்கரை மக்கள் மட்டுமன்றி ஒல்லிக்குளமிருந்து மண்முனை வரையுள்ள மக்களும் இப் பேருந்தினை எதிர்பார்த்துக் காத்திருந்த போதிலும் இச் சேவையானது ஒரு சீரில்லாத சேவையாகவே இடம் பெறுவதனால் பயணிகள் பலத்த சிரமத்தின் மத்தியில் காத்திருந்தும் தனியார் பஸ் வண்டிகளிலே பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்படி நிலமைகளைக் கருத்தில் கொண்டு தங்கள் கம்பனியினால் சீரான பஸ் சேவையினை மேற்கொள்ளுமாறு பயணிகள் தெரிவிக்கின்றனர்.

## காத்தான்குடியில் சுனாமியால் மரணித்தோருக்கு பிரார்த்தனை.

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடியில் சுனாமியால் மரணித்த ஷுஹதாக்களுக்காக விசேட துஆ பிரார்த்தனையும் புனித கத்தமுல்குர்ஆன் வைபவமும் கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடி பத்ரிய்யாஹ் ஜும்ஆ பள்ளிவாயலில் இடம் பெற்றது.

இந்நிகழ்வு ஈழத்தின் சொற்கொண்டல் மௌலவி அல்ஹாஜ் ஏ.ஜே.அப்துர்றவூப் மிஸ்பாஹி த். லைமையில் இடம் பெற்ற போது பிரதம அதிதியாக முன்னாள் பிரதி அமைச்சரும் விமான நிலையத் தலைவருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டார்.

விசேட துஆப் பிரார்த்தனையை சங்கைக்குரிய மௌலானா மௌலவி ஷெய்குல் பலாஹ் எம்.ஏ. அப்துல்லாஹ்றஹ்மானீ நடாத்தி வைத்தார்.

பெருந்திரளான பொது மக்கள், பள்ளிவாயல்கள் நம்பிக்கையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில் அன்ன தானமும் விநியோகிக்கப்பட்டது.

## சுனாமி வதந்தியால் நான்கு வயது சிறுமி காயம்

(நமது நிருபர்)

கல்முனைப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட சுனாமி வதந்தியால் நான்கு வயதுச் சிறுமி காயமடைந்து கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாண்டிருப்பு 2ஐச் சேர்ந்த கே.கிசோபிதா எனும் சிறுமியே காயமடைந்தவராவார். நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் ஏற்பட்ட இந்த வதந்தியால் வீடுகள், நலன்புரி நிலையங்கள் மற்றும் வீதிகளில் காணப்பட்ட மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர்.

பாண்டிருப்பைச் சேர்ந்த இந்தச் சிறுமி தனது தந்தையுடன் துவிச்சக்கரவண்டியில் வந்து கொண்டிருந்த வேளையில் மற்றுமொரு துவிச்சக்கரவண்டியுடன் மோதியே காயம் ஏற்பட்டுள்ளதாக கல்முனை வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தன.

## சுனாமியால் பாதிக்கப்படாதவர்கள் நிவாரணம் பெறுவதில் முண்டியடிப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்படாத சிலர் நிவாரணங்களைப் பெறுவதில் முண்டியடித்துக் கொண்டு காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக வீடுகள், பொருட்கள், உறவுகள் இழந்து அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு பொது அமைப்புக்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களூடாக வழங்கப்படுகின்ற நிவாரணப் பொருட்களில் எவ்வித பாதிப்புக்களும் இன்றி சந்தோஷமான முறையில் வீடுகளில் தங்கி இருக்கும் மக்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றமையினால் பலத்த சேதங்களையும், பாதிப்புக்களையும் எதிர்நோக்கிய மக்கள் நிவாரணம் வழங்கல் விடயத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேடான நிவாரணம் வழங்கல் விடயத்தில் சம்மந்தப்பட்ட அரச அதிகாரிகள் சிலரும் இதற்கு ஆவனை செய்வதாகவும் தெரிய வருகின்றது.

### தாய் தந்தையர் இழப்பு

(நமது நிருபர்)

ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் 17 குழந்தைகள் தமது தாய் தந்தை இருவரையும் இழந்துள்ளனர். அத்தோடு 32 குழந்தைகள் இருவரில் ஒருவரை மட்டும் இழந்துள்ளதாக புள்ளி விபர அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது

## மட் புனித மிக்கேல் கல்லூரியில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு அரச நிவாரணம் இதுவரை இல்லை.

**-கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஜேம்ஸ் பீரிஸ் தெரிவிப்பு.-**

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் மோசமாகப்பாதிக்கப்பட்ட கல்லடி திருச்செந்தூர் கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து சுனாமித் தாக்குதலுக்காக 26ம் திகதி தொடக்கம் இற்றை வரை மட்டக்களப்பு புனித சென் மைக்கல் கல்லூரியில் அகதிகளாக இருக்கும் 1500 பேருக்கு இன்று வரை அரசாங்க உதவிகளோ, அரச அதிகாரிகளோ ஏறிட்டும் பார்க்கவில்லை என கல்லூரியின் அதிபர் அருட் சகோதரர் ஏ.ஜேம்ஸ் பீரிஸ் கவலை தெரிவித்தார்.

இதே வேளை மட்டு சிசிலியா வித்தியாலயத்தில் 1000 பேரும், சென் மைக்கல் வித்தியாலயத்தின் ஆரம்பப் பாடசாலையில் 500 பேர் டச்பார், புதுமுகத்து வாரத்தைச் சேர்ந்தவர்களும் இற்றை வரை அகதிகளாக தஞ்சம் அடைந்து இருந்து வருகின்றனர்.

இவர்களுக்கும் அரசாங்க உதவிகள் கிடைக்காத நிலையில் மட்டக்களப்பு எஹெட் நிறுவனமே இன்று வரை சமைத்த உணவுகளையும், தலா ஒரு குடும்பத்திற்கு 6,000 ரூபா சமையல் உபகரணங்களையும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பும் மாத்திரமே உதவிகளை வழங்கி வருவதாக அருட் சகோதரர் ஏ.ஜேம்ஸ் பீரிஸ் தெரிவித்தார். மிக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வீடு வாசல்கள் தரைமட்ட மாக்கப்பட்டு பல உயிர்களை காவு கொடுத்து நிர்க்கதியான மக்களுக்கு உடனடியாக அரச நிவாரணங்களை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு அல்லவா என அகதிகளும் கவலை தெரிவித்தனர்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு இதுவரை கொடுப்பனவு வழங்கப்பட வில்லை.

(காத்தான்குடி நிருபர்)

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் சுனாமியால் பாதிப்புற்று மரணமடைந்தவர்களுக்கான கொடுப்பனவு அதிகமான பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வழங்கப்பட்ட போதும் வாழைச்சேனை பிரதேசத்தில் இற்றை வரை இக்கொடுப்பனவு வழங்கப்படாதது அதிகாரிகளின் அசமந்தமான நடவடிக்கை என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.



ஆழிப் பேரலை அனர்த்தம் நிகழ்ந்த முல்லைத்தீவு பிரதேசத்தை கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியார் திருமதி அடேல் பாலசிங்கமும் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

பல நூற்றுக்கணக்கான உயிர்கள் சுனாமியால் பலியாகிய நிலையில் ஒருவருக்கு தானும் மரணக் கொடுப்பனவு வழங்கப்படாமையிட்டு அதிருப்தியும் விசனமும் அடைகின்றேன்.

இவ்விடயத்தில் அதிகாரிகள் பிரதேச செயலகம் உரிய நடவடிக்கைகளை எடுத்து தாமதியாது உடன்கொடுப்பனவை வழங்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

## மட். மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட காணிகள் விபரம் திரட்டு

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நெற்காணிகளின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

அந்தந்தப் பிரதேச கமநல கேந்திர நிலையங்களினூடாக வட்டைச் சேவையாளர்கள் மூலமாக இவ் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் ஏற்பட்ட பாரிய வெள்ளப் பெருக்கினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான நெற்காணிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நெற் காணிகளை செய்கை பண்ணிய அனைத்து விவசாயிகளுக்கும் நஷ்டஈடு வழங்க வட்டைச் சேவையாளர்கள் ஆவண செய்ய வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## மக்கள் கோரிக்கை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உரிய முறையில் நிவாரணங்கள் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுகின்றனர். சில இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் உரிய முறையில் சென்றடையாததால் அவர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். அத்துடன் அனர்த்தத்தால் பாதிக்கப்படாதவர்கள் சிலர் நிவாரணப் பொருட்கள் பெறுவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

## ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன் சுவாட் அமைப்பு நிவாரணப் பணியில்

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுவாட் அமைப்பானது ஒக்ஸ்பாம் நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு உதவிகளை மேற்கொண்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டு 21நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள சுமார் 6398 குடும்பங்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம், தாண்டியடி, கள்ளியந்தீவு பாடசாலை, சரஸ்வதி வித்தியாலயம், தம்பட்டை, கனகர் பாடசாலை, ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இராமகிருஷ்ண கல்லூரி,மத்திய கல்லூரி, காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இராமகிருஷ்ண மிசன் பாடசாலை சண்முகா வித்தியாலயம் கல்முனை பிரதேச பிரிவிலுள்ள சிங்கள மகா வித்தியாலயம், கணேசா மகா வித்தியாலயம், பாண்டிருப்பு மகா வித்தியாலயம், பெரிய நீலாவணை மகா வித்தியாலயம், பாண்டிருப்பு பிள்ளையார் ஆலயம், பத்திமா கல்லூரி, வெஸ்லி உயர்தரப் பாடசாலை.

அக்கரைப்பற்று பிரதேச பிரிவிலுள்ள புதுநகர், ஆடைத் தொழிற்சாலை பொத்துவில் பிரதேச பிரிவிலுள்ள கோமாரி 01 ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு இவ்வுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ் நிவாரண உதவியில் உடுதுணிகள் சவர்க்காரம் என்பன வழங்கப்பட்டன.

## வைத்தியசாலையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டாமென ஆர்ப்பாட்டம்.

(நிந்தவூர் நிருபர்)

சுனாமியால் சேதமடைந்த நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டாம் அதே இடத்தில் புனரமைக்குமாறு [illegible] கோரி நேற்று நிந்தவூரில் ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது.

நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை சுனாமிக் கடற்பேரலையின் தாக்கத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இவ் வைத்தியசாலை நடவடிக்கையினை நிந்தவூர் பிரதான வீதியில் தற்காலிக கூடாரங்களை அமைத்து வைத்திய சேவைகள் நடைபெற்று வருகின்றது. எனினும் இவ்வைத்தியசாலையை வேறு ஒருஇடத்தில் நிரந்தரமாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் இதனை வேறுஇடத்தில் அமைக்க வேண்டாமெனக் கோரி நிந்தவூர் பிரதேச செயலகம், மற்றும் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தலைமை அலுவலகம் முன்னாலும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதே வேளை இவ் வைத்தியசாலையை பழைய இடத்திற்கு மாற்றும் பட்சத்தில் எங்களால் அங்கு கடமையாற்ற முடியாதென வைத்தியர்களும், தாதிமார்களும் கூறுகின்றனர். இவ் வைத்தியசாலை கடற்கரையிலிருந்து 100 மீற்றர்தூரம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தென்கொரியத் தூதுக் குழுவினர் யாழ். குடாநாட்டிற்கு விஜயம்

(ஆ.கந்தசாமி)

தென்கொரியாவின் குடிவரவு குடியகல்வு மற்றும் தூதுவராலயங்கள் விவகார அமைச்சர் அன்ஸ்கில் யொங் மற்றும் தென்கொரிய தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர், பணிப்பாளர் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் (28-01-2005) யாழ் குடாநாட்டிற்கு விஜயம் செய்துள்ளனர்.

சுனாமி ஆழிப்பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட யாழ் குடாநாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் தென்கொரியாவால் வழங்கப்படவுள்ள உதவிகள் குறித்து ஆராய்வதற்கான முன்னோடி விஜயமாக யாழ் வந்த இவர் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேசங்களையும், பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களையும் நேரில் சென்று பார்வையிட்ட இக்குழுவினர்

எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களில் தென்கொரியா வழங்கவுள்ள தொழில்நுட்ப உதவிகள் குறித்து யாழ் அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்விலும் இவர்கள் கலந்து கொண்டார்கள்.

# கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டது

(ந.கபிலன்)

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கிராமங்களுக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவியுடன் பொருட்கள் வழங்கப்பட்டன.

கிராமங்களில் உள்ள ஆலயங்களுக்கு ஒலிபெருக்கிகளும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு கதிரைகளும் வழங்கப்பட்டன.

வியாழக்கிழமை வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலாளர் அலுவலக மண்டபத்தில் வைத்தே இவ்வாறான பொருட்களை வவுனியா மாவட்ட அரச அதிபர் எஸ்.சண்முகம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களால் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறான உதவிகள் செட்டிக்குளம் பிரதேச செயலாளரின் ஏற்பாட்டில் அவரது ஒழுங்குபடுத்தலின்கீழ் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## குடா நாட்டில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சீருடைத்துணிகள் வழங்க "யுனிசெப்" நடவடிக்கை

(ஆ.கந்தசாமி)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ் குடாநாட்டின் கரையோரப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்குச் சீருடைத் துணிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வியை 4 மாதகாலத்துள் கட்டியெழுப்புதல் என்ற திட்டத்தின்கீழ் இவ்வுதவியை வழங்க ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (UNICEF) நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இவ்வுதவிகள் வடக்குக் கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல மாவட்டங்களைச் சேர்ந்த சிறார்களுக்கும் இது வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வமைப்பினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு நாடளாவிய ரீதியில் தற்போது கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்களுக்கு செட்டிக்குளத்தில் புதிய வீடுகள் கையளிப்பு

(ந.கபிலன்)

யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்து இந்தியா, மற்றும் நலன்புரி நிலையங்களில் குடியிருந்த மக்கள் 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மெனிக்பாம், கிறிஸ்தவக்குளம் போன்ற கிராமங்களில் குடியேற்றப்பட்டனர். இவ்வாறு குடியேறிய மக்களுக்கு தற்போது செட்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள அதே கிராமங்களில் புதிய வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்பட்டு வியாழக்கிழமை மக்களிடம் கையளிக்கப்பட்டன.

மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர் ஆகியோர் கலந்து கொண்டு புதிய வீடுகளைத் திறந்து வைத்து கையளித்தனர். மெனிக்பாம் பகுதியில் 25 வீடுகளும், கிறிஸ்தவக்குளம் பகு தியில் 20 வீடுகளும் மக்களிடம் கையளிக்கப்பட்டதுடன் மெனிக்பாம் பகுதியில் பொதுநோக்கு மண்டபமும் திறந்து வைக்கப்பட்டது.

பல ஆண்டுகளாக இடம் பெயர்ந்து பல இன்னல்களுக்கும் முகம் கொடுத்த மக்களுக்கு இவ்வீட்டுத் திட்டத்தின் மூலம் பலன் கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தீவகக் கடற்பரப்பில் மீண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிக்கின்றனர்

(ஆ.கந்தசாமி)

**-தீவகக் கடற்றொழிலாளர்கள் விசனம்-**

யாழ் தீவகக் கடற்பரப்பில் மீண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து கடற்றொழில்களில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். மேற்படி கடற்பரப்புகளில் நீண்டகாலமாக இல்லாதிருந்த இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளமை குறித்து தீவகக் கடற்தொழிலாளர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்டிருக்கும் யாழ்குடா நாட்டு கடற்றொழில் வளங்களை மேலும் சீரழிக்கும் விதத்தில் இந்திய மீனவர்கள் கனரக இழுவைப் படகுகள் சகிதம் குடாநாட்டுக் கடற் பரப்பில் அத்துமீறி தொழில் செய்ய முனைகின்றமை மனிதாபிமானம் அற்ற செயலென யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் பலரும் தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளனர்.

# மாநகரசபை கூட்டத்தைத் தடுத்து நிறுத்துமாறு மேல்நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு

கொழும்பு மாநகர சபையின் நிதிக்குழுவினர் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு நடத்தவிருந்த கூட்டத்தினை தடுத்து நிறுத்துவதற்கான இடைக்காலத் தடை உத்தரவொன்றை மேல் முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

கொழும்பு மாநகர சபையின் உதவி ஆணையாளரான அசாத்சாலி உட்பட எட்டு மாநகர சபையின் உறுப்பினர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை பரிசீலனை செய்வதற்கு அனுமதி வழங்கிய பின்னரே மேல் முறையீட்டு நீதிமன்றம் இத்தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இதில் 46 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மாநகர சபையின் முகாமைத்துவ நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான புதன்கிழமை குறிப்பிட்ட நிரந்தர செயற்குழுவினால் நடாத்தப்பட்ட வாக்குக் கணிப்பு மோசடி மிக்கதாக அமைந்திருந்தது என்று இந்த மனுவில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரையும் எதிர்வரும் பெப்ரவரி 11ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# சுனாமி அனர்த்தத்தை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை உருவாக்கலாம்

**-கலாநிதி அன்ரன் பாலசிங்கம்-**

சுனாமி அனர்த்தத்தை ஒரு சந்தர்ப்பமாக வைத்து அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் உருவாக்கலாம் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

தாழையடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இதனைக் கூறினார். வேற்றுமை, பிரிவினைகளை மறந்து அரசாங்கத்துடன் பேசி ஒரு பொதுவான வேலைத் திட்டத்தை உருவாக்கி வெளிநாடுகளிலிருந்து வரும் நிதியுதவிகளைச் சமமாகப் பகிர்ந்தளித்து மக்களின் உடனடித் தேவைகளையும், அவர்களின் புனர்வாழ்வுப் புனர்நிர்மானத் தேவையை முயற்சித்து வருவதாகவும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அரசியல் ஆலோசகர் சுனாமி அனர்த்தத்தினால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமோ அல்லது அவர்களின் இனப்பிரச்சினைகளோ அடித்துச் செல்லவில்லை.

மாறாக அவை தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாகவே தொடர்ந்தும் இருக்கின்ற போதும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மானப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் எனவும் சிறிலங்கா அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தார்.

# இலங்கைக்கு நிவாரண நிதியாக 3522 மில்லியன் ரூபா கிடைக்குமாம்

சுனாமி நிவாரண நிதியாக 3522 மில்லியன் ரூபாய் கிடைக்கவிருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ளோராலும் வர்த்தக நிறுவனங்களிலும் இந்த நிதி கிடைக்கவிருப்பதாக மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கிக்கு இரண்டு அரச வங்கிகளிடம் இருந்து 453 மில்லியன் ரூபாய் கிடைத்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# மேமன் சங்கத் தூதுக் குழுவினர் காத்தான்குடிக்கு இன்று வருகை

(காத்தான்குடி நிருபர்)

இலங்கை மேமன் சங்கத்தின் தூதுக்குழுவினர் இன்று ஞாயிற்றுக்கிழமை 30ஆம் திகதி காத்தான்குடிக்கு வருகை தந்து சுனாமியால் பாதிப்புக்குள்ளான பல பகுதிகளைப் பார்வையிட்டு உதவிகளும் வழங்கவுள்ளனர்.

காத்தான்குடியில் சுனாமியால் பாதிப்புக்குள்ளான மக்களையும் சந்திக்கும் இவர்கள் பள்ளிவாயல் சம்மேளன பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாகவும் இதன் ஏற்பாட்டாளரும், சமூக சேவையாளருமான கே.எம்.எம்.கலீல் ஹாஜியார் தெரிவித்தார்.

# மரண அத்தாட்சிப் பத்திரம் துரிதமாக வழங்கும் திட்டம்

(நமது நிருபர்)

இயற்கை அனர்த்தங்களால் உயிரிழந்து அல்லது காணாமல் போனோரின் மரண அத்தாட்சிப் பத்திரங்களைத் துரிதமாக வழங்கும் வகையில் திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கு அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது.

இதற்கான சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அங்கீகாரமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார். சுனாமி அனர்த்தத்தால் இழந்த மற்றும் காணாமல் போனோர்கள் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் நிலையைக் கருத்தில் கொண்டு இந்த சட்டமூலம் கொண்டுவரப்படவிருப்பதாகத் தெரிவித்த பதிவாளர் நாயகம் தற்போதைய சட்டத்தின்படி காணாமல் போனோர்களுக்கான மரணச் சான்றிதழ் 7 வருடங்களுக்குப் பின்னரே வழங்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஆராயப்பட்டதாக அரச நிருவாக உள்நாட்டு நிருவாக அமைச்சர் அமரர் சிறி தொடங்கொட தெரிவித்தார்.

## சுனாமியால் 98 வழிபாட்டுத் தலங்கள் பாதிப்பு

சுனாமித் தாக்கத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு பிரதேசப் பிரிவுகளில் 98 வழிபாட்டுத் தலங்கள் பாதிப்புக்குள்ளாகி சேதமடைந்திருப்பதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ தகவல் பிரிவு தெரிவித்துள்ளது.

களுவாஞ்சிகுடி செயலகப் பிரிவில் வழிபாட்டுத் தலங்களும், மண்முனை வடக்கில் 32 வழிபாட்டுத் தலங்களும், வாழைச்சேனையில் 21 வழிபாட்டுத் தலங்களும், வாகரையில் 9 வழிபாட்டுத் தலங்களும், காத்தான்குடிப் பிரிவில் 7 வழிபாட்டுத் தலங்களும், செங்கலடியில் 5 வழிபாட்டுத் தலங்களும் சேதமடைந்துள்ளன.

ஆரையம்பதிப் பிரிவின் வழிபாட்டுத் தலங்களின் சேதவிபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## பாதிப்புற்றவர்களை நலன்புரி நிலையங்களில் தொடர்ந்து தங்கவைத்தால் மனநிலை பாதிக்கப்படும்

(நமது நிருபர்)

**பேராசிரியர் சுரேஸ் மெண்டிஸ்**

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான உளநிலை மற்றும் சுகாதார சேவைகளை வழங்குதல், ஆய்வு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நெறிமுறைகள் பற்றி கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் றுகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடாதிபதி பேராசிரியர் சுரேஸ் மெண்டிஸ் பேசுகையில்:-

ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ச்சியாக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலை அவர்களின் உளநிலை மற்றும் சுகாதாரம் பாதிக்கப்படுவதற்கு காரணமாக அமையும் என்றார்.

இதேவேளை இலண்டன் பல்கலைக்கழகத்தின் மனோதத்துவ நிபுணர் பேராசிரியர் வில்லியம் ஜோன் பேசுகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவள ஆலோசனைகளும் அவர்கள் தொடர்பான செயற்பாடுகளும், முறையான கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## காத்தான்குடியில் பாதிப்புற்ற மக்களை முஹம்மத் எம்.பி குழு பார்வை

(காத்தான்குடி நிருபர்)

உலக இஸ்லாமிய றாபித துல் ஆலமிய்யாவின் இலங்கையின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான எம்.எச்.முஹம்மத் எம்.பியும் அவரது குழுவினரும் இன்று காத்தான்குடிக்கு விஜயம் செய்கிறார்கள்.

26ஆம் திகதி சுனாமியால் பாதிக்கப்பட்ட காத்தான்குடி பிரதேசத்துக்கு வருகைதரும் இவர்கள் பல்வேறு அமைப்புக்களையும் சந்திப்பதுடன் கடும் பாதிப்புக்குள்ளான அங்கவீனர் நிலையத்துக்கும் விஜயம் செய்யவுள்ளதாக முஸ்லிம் மீடியாபோரம் செயலாளர் மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா தெரிவித்தார்.

# முதலாவது போட்டியிலேயே சதம் பெற்றவர்கள் இவர்கள்




இன்றைய சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பலர் வருகிறார்கள். பல வீரர்கள் இன்று வரைக்கும் பிரபலமாகப் பேசப்படுகின்றார்கள். இவ்வாறு பல வீரர்கள் தாம் பங்கு கொண்ட முதல் போட்டியிலேயே



காணாமல் போயுள்ளாகள். அவற்றுள் சிலர் தமது முதலாவது போட்டியிலே ரசிகர்களை அசத்தியுமுள்ளனர்.

இவ்வாறு அசத்தினாலும் இன்று அவர்கள் தமது ஆரம்பப் போட்டியில் சதம் அடித்தார்கள். ஆனால் இப்படிப்பட்ட வீரர்களை இன்று நாம் நினைத்துக் கூடப் பார்க்க முடியாமையினால் அவர்களது கிரிக்கெட் வாழ்க்கை மூடுபனி போன்று சென்று விட்டது.

இவர்கள் எத்தனை பேர் எந்த நாடுகளுக்கு எதிராகச் சதம் பெற்றிருக்கிறார்கள் என்பதை ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் பார்ப்போம்.

சர்வதேசக் கிரிக்கெட் ஒரு நாள் போட்டிகளில் இது வரைக்கும் தமது முதல் போட்டியிலே சதம் பெற்றவர்கள் இதுவரைக்கும் நான்கு வீரர்களே உள்ளனர்.

இவற்றுள் முதன் முதல் இந்தச் சாதனையைப் படைத்தவர் இங்கிலாந்து அணியைச் சேர்ந்த துடுப்பாட்ட வீரர் டெனிஸ் அமிஸ் இவர் 1972 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிராக ஓல்ட் டரபோட்டில் இடம் பெற்ற போட்டி இவரது முதல் போட்டியாக அமைந்தது. அப்போட்டியில் அமிஸ் 103 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டாவது இச்சாதனைக்குச் சொந்தக்காரர் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி ஆட்ட வீரர் "டெஸ் மண்ட் ஹெய்ன்ஸ்" இவரைப் பொறுத்தமட்டில் 1977 - 1978 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராகச் சென் ஜோன்ஸ் மைதானத்தில் விளையாடிய முதல் போட்டியில் 148 ஓட்டங்களைப் பெற்றார்.

மேலும் ஹெய்ன்ஸ் இன்னுமொரு சாதனைக்கு உரித்துடையவர். ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் முதல் போட்டியிலேயே அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றவர். 148 என்ற இவரது இலக்கே இதுவரைக்கும் சாதனையாக உள்ளது.


மூன்றாவது வீரர் சிம்பாவேயின் அண்டி பிளவர் ஆவார். இவர் 1992 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணிக்கு எதிராகத் தமது முதலாவது போட்டியில் ஆட்டமிழக்காது 115 ஓட்டங்களைப் பெற்றார்.

முதல் போட்டியிலேயே சதத்துடன் அதி கூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றவர்கள் வரிசையில் அண்டி பிளவர் இரண்டாவது இடத்தில் இது வரையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நான்காவது வீரர் பாகிஸ்தானின் சலிம் எலாகி 1995 ஆம் ஆண்டு குஜரன் பலாவில் இடம் பெற்ற போட்டியில் இலங்கைக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்றார்.

பாகிஸ்தான் வீரர் சரிட் அப்ரிடி குறைந்த பந்தில் சதம் பெற்றவர் என்ற பெயரைத் தன்வசம் வைத்திருப்பவர்.

1996 ஆம் ஆண்டு நைரோ



பியின் ஜிம்கானா மைதானத்தில் இலங்கைக்கு எதிராக 40 பந்துகளில் 102 ஓட்டங்களை அவர் பெற்றார்.

ஆனால் அது அவருடைய இரண்டாவது போட்டி. அப்போது அவரது வயது 16 முதல் போட்டியில் அவருக்குத் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

தமது முதல் போட்டியிலேயே 80ற்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றோர் 07 பேர் ஆவர். மேலும் அரிட் அப்ரிடி போன்றேதாம் விளையாடிய இரண்டாவது போட்டியிலேயே தான் இந்திய வீரர் யுவராஜ் சிங்கும் 84 ஓட்டங்களைப் பெற்றார்.

2000 ஆம் ஆண்டு நைரோபி மைதானத்திலேயே இவர் இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எமது பிரதேச விளையாட்டு வீரர்களுநம் எதிர்காலமும்

## பகிர்ந்து கொள்கிறார் களுதாவளை கெனடி விளையாட்டுக் கழக உறுப்பினர்

ஒரு மனிதனை உடல், உள ரீதியாக மட்டுமின்றி அவருடைய சமூக சிந்தனையில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்துவதில் விளையாட்டுத்துறை அதிக பங்கு கொள்கின்றது. என்று உடற் கல்வியியலாளர் டீ.போடர் தெரிவித்துள்ளார்.

இதே போன்றுதான் ஆரம்ப கால விளையாட்டுக்களுக்கும் அதனுடைய வளர்ச்சிக்கும் இடையேயான வேகம், அடிப்படையில் இருந்து, பெருமளவு தற்போது தனிந்து வருகின்றது. காரணம் என்னவென்று கேட்கும் போது தற்காலத்து இளைஞரிடையே வளர்ந்து வருகின்ற சமூகப் பற்றின்மை ஒரு காலத்தில் சமூகப் பற்றுடன் கூடியே விளையாட்டுத் துறை போட்டியாக வளர்ந்து வந்தது.

ஆனால் தற்போது ஒருவர் தனி மனித வளர்ச்சி நோக்கிய பாதையில் வீரர் ஒருவரோ அல்லது அவருடன் சம்பந்தப்பட்டவர்களோ முன்னேற நினைப்பது தான் இன்றைய விளையாட்டுத் துறையின் வளர்ச்சியின்மைக்கான காரணமாக உள்ளது.

இவற்றினை அடிப்படையாகக் கொண்டு விளையாட்டுத் துறையை ஒதுக்கிவிடாது தமது அன்றாட செயற்பாடுகளில் விளையாட்டையும், அதனுடன் தொடர்புடைய பயிற்சிகளையும் இடைவிடாது மேற்கொள்வ[illegible]தனாலேயே நமது வளர்ந்து வருகின்ற சமுதாயம் இன்றைய இளம் தலைமுறையாவது மீண்டும் தேசிய விளையாட்டுத் துறைகளில் சான்றிதழும் தமிழர் என்ற பாராட்டுதல்களையும் பெறலாம்.

தேசிய விளையாட்டுப் போட்டிகளை எடுத்து நோக்குகையிலே தமிழர் பிரதேசம் விளையாட்டு புறக்கணிக்கப்பட்டுக் கொண்டே



வருவதை அன்றிலிருந்து இன்றுவரை காணக் கூடியதாக உள்ளது. பல ஆர்வமிக்க விளையாட்டு வீரர்களை எமது தமிழர் தாயகம் கொண்டிருந்தாலும் அவர்கள் ஏதோ ஒரு வகையில் புறக்கணிக்கப்பட்டு சர்வதேச ரீதியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழக்கின்றனர்.

இவற்றி லேயும் எமது அரசு சிங்கள வீரர்களுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுத்து வருவதையும் அவர்களுக்கு பல புலமைப் பரிசில்களையும், விருதுகளையும் வழங்கி அவர்களை விளையாட்டுத் துறையில் வளர்ச்சி பெறுவதற்கு துணைபுரிவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவற்றை அறிந்து பல பிரதேச வீரர்களும் மனமுடைந்து போகிறார்கள். எதற்காக நாம் பயிற்சியிலீடுபட வேண்டும். விளையாட வேண்டும். என நினைத்தே நாம் தனிப்பட்ட தொழில் ஒன்றினைத் தேடி அவற்றில் இருந்து விளையாட்டுத் துறையைப் வெறுக்கின்றனர். ஆனால் விளையாட்டு வீரர்கள் எமது பிரதேச வீரர்கள் நிச்சயமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது பிரதேசத்தவர்கள் உடல் உள ரீதியாக ஏற்கனவே பல விதத்திலும் பாதிப்புற்றுள்ளவர்கள். இதனடிப்படையில் இவற்றை உடனடியாக ஈடு செய்வதற்கு விளையாட்டுக்கள் அவசியம். அர சாங்கம் எமக்கு உதவிகளை வழங்காவிடினும் பரவாயில்லை. எமது தனிப்பட்ட முயற்சியின் ஊடாக வெற்றிகள் பல பெறவேண்டும். அதன் ஊடாக வெற்றியடைய வேண்டும்.

உண்மையான ஒரு விளையாட்டு வீரனிடம் இவை போன்ற நழுவாத்தன் மை அதிகமாக காணப்பட வேண்டும். இப்படியான பொறுப்புகளுடன் ஒவ் வொரு வீரர்களுக்கும் தமது பொறுப்பு விளையாட்டுத் துறையை எமது பிரதேசத்தில் உச்ச நிலைக்குக் கொண்டு வருவது என்று செயற்பட வேண்டும்.

இதனை விடுத்து விளையாட்டுத் துறையில் தமது மனம் விடுபட்டு வேறு திசைகளில் மனம் விலகிச் செல்ல ஆரம்பமா னால் அது தனி மனிதனுக்கு ஏற்பட்ட பாரிய இழப்பு என்றே கூறலாம்.

எனவே எமது பிரதேச விளையாட்டு வீரர்களே! தங்களது திறமைகளை மூடி மறைக்க ஆயத்தமாகாதீர்கள். பலருக்கும் பல விதமான பொறுப்புக்கள் சமூகத்தில் இருக்கின்றன.

அவற்றைப் புறம் தள்ளிவிட்டு அனைத்து நேரத்தையும் இவ் விளையாட்டுத் துறையில் செலவழியுங்கள் என்று கூறவில்லை. தங்களால் இயன்ற நேரத்தில் நீங் களும் தங்களால் இயன்றவரை இன்றைய இளம் தலைமுறையினரையும் விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடுள்ளவர்களாக மாற்றுங்கள்.

அத்துடன் தாங்களும் தங்களது திறமையை வளர்த்துக் கொண்டு சமூகத்தில் ஒரு சிறந்த தலைமைத்துவத்தை முன்னெடுத்துச் செல்லுங்கள்.

# அதிரடி நாயகர்கள்

டெஸ்ட் கிரிக்கெட்டா.. எடுப்பாங்கப்பா ஒரு ஓட்டம் எடுக்கவே ஏகப்பட்ட ஓவர்களை விழுங்கி விடுவார்கள் என்று ரசிகர்கள் சினந்து கொள்ளுவதுமுண்டு. துடுப்பாட்ட வீரர்கள் களத்தை விட்டு நகராமல் பல நூறு பந்துகளைச் சந்தித்து ஒரு சில ஓட்டங்களைத் தான் பெறுவார்கள்.

இவர்கள் மத்தியில் சில விளாசல் மன்னர்களும் உண்டு. இவர்களால் தான் டெஸ்ட் போட்டியில் ஆர்வம் இன்றுவரைக்கும் உண்டு. களத்தில் ஆறு ஓட்டம் என தூள் கிளப்புகின்றனர்.

இவர்களைப் பொறுத்த வரை ஒரு நாள், டெஸ்ட் போட்டி என்ற பாகுபாடு இல்லை. இவர்களுக்கு எந்தப் போட்டியானாலும் அதிரடி ஆட்டம் மட்டும் மாறவே மாறாது.

இப்படிப் புயல் வேகத்தில் ஓட்டங்கள் குவிக்கும் வீரர்கள் பற்றி கிரிக்கெட் பைபில் என்றழைக்கப் படுகின்ற "விஸ்ரன்" சஞ்சிகை ஓர் ஆய்வினை நடாத்தியது.

இந்த ஆய்வின் அடிப்படையில் அவுஸ்ரேலியாவின் அடம் கில்கிறஸ்ட் முதல் இடத்தைப் பிடித்துக் கொண்டார். இதனைத் தொடர்ந்து இந்தியாவின் கபில்தேவ் இரண்டாவது இடத்தினையும் ஐந்தாவது இடத்தினை இந்தியாவின் விளாசல் மன்னன் சேவாக்கும் பெற்றிருந்தனர்.

அந்த வகையில் 6 ஆவது இடத்தினை அன்ரூ பிளிள்டொப், கெய்ண்டஸ் ஜெயசூர்யா போன்றோர் தற்போது விளையாடுகின்ற கிரிக்கெட் வீரர்களாகவும் முதல் 10 வீரர்களுள் அடங்கும் சில வீரர்களாகவும் இருக்கின்றனர்.

# சுனாமியினூடே விளையாட்டு வீரர்களிடம் ஒற்றுமையும் வளர்கின்றது

பலருக்கும் பல விதமான கருத்து முரண்பாடுகளால் பிரச்சினைகள் ஏற்படுவதுமுண்டு, ஏற்பட்டதுமுண்டு. இவ்வாறான நிலைமைகள் விளையாட்டு வீரர்களிடமும் ஏற்படுவதைப் போன்றே பல வெளிநாடுகளிடையே ஏற்படுவது வழக்கம்.

அண்மையில் இடம் பெற்ற சுனாமித் தாக்கத்தினைத் தொடர்ந்து பல விளையாட்டுப் போட்டிகள் நிவாரணங்கள், மீள் கட்டுமானப் பணி போன்ற உதவிகளைப் பாதிப்புற்ற நாடுகளுக்கு வழங்குவதற்காக நடாத்தப்படுகின்றன.


அந்த வகையில் பல எதிர்ப்புக்களை தம்முள்ளே கொண்டிருந்த வீரர்கள் நாடுகள் ஒன்றாக இணைந்து இக்கருமத்தில் மிகச் சிறந்த வெற்றி ஒன்றை கிரிக்கெட்டின் ஊடாக கண்டுள்ளனர்.

ஆசிய கிரிக்கெட் அணியைப் பார்க்கும் போது பல ஆண்டுகளாகக் கீரியும் பாம்பும் போல நடந்து கொண்ட பாகிஸ்தான் வீரர்களுடன் இந்திய வீரர்கள் ஒன்றிணைந்து தமது சந்தோசங்களை மற்றவர்களிடமும் அவர்களது சந்தோசங்களை இந்தியர்களிடமும் பகிர்ந்து கொள்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

அதே போன்றுதான் அவுஸ்ரேலியா - நியூசிலாந்து அணி வீரர்களும் இணைந்து விளையாடினர்.

அத்துடன் பல கருத்துக்களைத் தமக்கிடையே எதிர்மாறாகப் பகிர்ந்து கொண்டிருந்த உலக சாதனைக்காக போட்டியிட்டுக் கொண்டிருந்த சுழற்பந்து வீச்சாளர்களான முரளியும், சேன் வோர்னும் இணைந்து விளையாடினார்கள்.

இது போலவே சுனாமி பல இழப்புக்களை ஏற்படுத்திவிட்டுச் சென்றிருந்தாலும் சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களிடையே பெரியதொரு ஒற்றுமை வளர்ந்துள்ளது என்றே கூற வேண்டியுள்ளது.




# உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## T. Vipusanan Manpower (pvt) Ltd.

Main st. Eravur-5, Chenkalady
Tel: 071-2528248, 077-6966445
077-6668747
கூட்டுறவுச் சங்கம் எதிரில்

Brance:- Baddula Rd, Karadiyanaru, Chenkalady
தமிழீழ காவல் துறைக்கு முன்னால்

**விபுஷனன் மத்திய கிழக்கு நாடுகளுக்கான வேலை பெற்றுத் தரும் நிறுவனம்**

மின்னஞ்சல் முகவரி: **brpm@sltnet.lk** இணையத்தளம: **www.thamarai.com**

டுபாயில் அமைந்துள்ள **பிரிட்டிஷ் வேஷற் அன்ட் கோ.** பிரித்தானிய அமெரிக்க கூட்டுப்படை முகாமிற்கு உணவு வழங்கற் பகுதிக்கு கீழ்க்கண்ட வெற்றிடங்கள் உள்ளன. தரமான சம்பளத்திற்கு வேலைகளுண்டு. தகுதியுடை

சகிதத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**முற்குறிப்பு :-** *தேவையேற்படின் 30,000 வரை வங்கிக் கடன் பெற்றுத் தரப்படும். மற்றும் பெண் சுத்திகரிப்பாளர்களுக்கான வெற்றிடங்கள் குவைத், டுபாய், சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் வேலை வாய்ப்புக்களுக்குத் தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட் முதற்கொண்டு விமான நிலையம் வரை எதுவித கட்டணங்களுமின்றி இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தங்கள் வெளிநாட்டுக் கனவை எதுவித முற்பணமும் இன்றி நனவாக்கிட உடன் விரையுங்கள்.*

| JOB POSITION | QTY | SALARY US $ |
|---|---|---|
| Administrator (Computer skills) | 20 | 550 |
| Pest Control Technician | 07 | 500 |
| Plumber | 40 | 550 |
| Carpenter | 40 | 550 |
| Rigger | 20 | 450 |
| Water Treatment Plant Technician | 12 | 550 |
| Janitor Skilled | 41 | 450 |
| Laundry Worker | 24 | 400 |
| Laundry Supervisor | 10 | 550 |
| NURSE (MALE) | 04 | 650 |
| Doctor | 06 | 1500 |
| Head Chef | 02 | 650 |
| Heavy Equipment Operator | 27 | 550 |
| HD Truck Driver / Bus Driver | 40 | 550 |
| Security Supervisor | 07 | 650 |
| Security Guard | 47 | 550 |
| Site Escort Supervisor | 08 | 450 |
| Kitchen Assistant | 10 | 400 |
| Power General Mechanic | 15 | 550 |
| Lab Technician | 04 | 550 |
| International Chef | 01 | 750 |
| Auto Mechanic/ Diesel | 12 | 550 |
| Reefer Mechanic (Refrigeration) | 06 | 550 |
| Auto Electrician | 10 | 550 |
| Kitchen Laundry Equipment Technician | 06 | 550 |
| Cook | 14. | 550 |

| JOB POSITION | QTY | SALARY US $ |
|---|---|---|
| Waiter | 20 | 450 |
| Electrician (Building) | 22 | 550 |
| A/C Technician split & windows | 30 | 550 |
| Cleaning Supervisor / Cleaning Crew Leader | 14 | 550 |
| Fabricator Welder | 06 | 550 |
| Welder | 10 | 550 |
| HR Personnel | 04 | 2000 |
| Concrete Workers (Mason) | 30 | 400 |
| HVAC Repair Technician | 12 | 550 |
| Crane Operator | 06 | 550 |
| Fuel Specialist | 04 | 550 |
| Fork lift truck operator | 15 | 550 |
| Baker | 10 | 550 |
| Head Waiter | 10 | 550 |
| Store Keeper | 04 | 550 |
| Time Keeper | 04 | 550 |
| Office Boy | 10 | 450 |
| Computer Operator | 08 | 550 |
| Safety Officer | 06 | 650 |
| Steel Fabricator | 08 | 550 |
| A/C Technician / Central A/C | 12 | 550 |
| General Labour (Male,. English Speaking) | 140 | 450 |
| General Office Personnel (Male,. Comp. Skills) | 06 | 550 |

*அனுராதபுரத்திற்கு நேர்முகப் பரீட்சைக்காகச் சென்ற கட்டார், டுபாய் போன்ற நாடுகளுக்கு எம்மூடாக விண்ணப்பித்த அனைவருக்கும் வீசா (Visa) கிடைக்கப் பெற்றுள்ளதால் நாளை திங்கட்கிழமை (31-01-2005) கொழும்பில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியுள்ளது.*

*எனவே இன்று ஞாயிற்றுக்கிழமை (30-01-2005) இரவு 8.00 மணிக்கு எமது அலுவலகத்தின் முன்னாலிருந்து பஸ் புறப்படவுள்ளதால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் மேற்குறிப்பிட்ட அனைவரும் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.*

*அத்துடன் புதன்கிழமை (02-02-2005) அன்று வேலைவாய்ப்பிற்காக மேற்படி நாடுகளுக்குச் செல்வதற்கு விமான ரிக்கட்டுக்களும் பதிவு செய்யப்பட்டு விட்டதால் தங்களுக்குக் குறிப்பிட்ட பணத்தினை தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறும் கேட்கப்படுகின்றீர்கள்.*

**மேற்குறிப்பிட்ட டுபாய், கட்டார் போன்ற நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் வேலை வாய்ப்புகள் உள்ளன. எனவே விரும்புவோர் வெளிநாட்டு முகவர்களினால் தினமும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். தகுதியுடையோர் மேற்கண்ட முகவரிக்கு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.**

**உரிமையாளர்:**



பாலசிங்கம் தாமரைவதனன்
பதுளை வீதி காரடியனாறு
செங்கலடி



**தொலைபேசி. 077-6668747**

# உலக செய்திகள்

## ஈராக்கிய குண்டு வெடிப்பில் ஆறு பேர் பலி; இருவர் காயம்.



(பக்தாத்)

ஈராக்கில் மின் நிலைய வளாகத்தில் கார் குண்டு வெடித்ததில் நேற்று முன்தினம் ஆறு பேர் பலியாயினர்.

ஈராக்கில் இன்று பொதுத் தேர்தல் நடைபெறுகின்றது. நேற்று முன்தினத்துடன் பிரசாரம் ஓய்ந்தது. இந்தத் தேர்தலை சீர்குலைப்பதில் சதாம் ஆதரவு கெரில்லாக்கள் மும்முரமாக உள்ளனர்.

தெற்கு பக்தாத்தில் துரா அருகே உள்ள மின்நிலையத்துக்கு நேற்று முன்தினம் காலை ஒருவர் முகத்தை மூடியபடி காரில் வந்தார். அங்குள்ள பாதுகாவலர்கள் அந்தக்காரை நிறுத்தி விசாரித்தனர். அதற்குள்ளாக அந்தக்கார் வெடித்து சிதறியதில் நான்கு பேர் உடல் சிதறி பலியாயினர். படுகாயமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட நான்கு பொலிசாரில் இரண்டு பேர் இறந்தனர்.

தேர்தலை நடத்தவிடாமல் செய்வதற்காக தீவிரவாதிகள் மும்முரமாக உள்ளதால், அவர்களது சதிவேலைகளை முறியடிக்க ஈராக் அரசு பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஈராக் எல்லைகள் மூடப்பட்டுள்ளன. பதட்டம் மிகுந்த பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஈராக்கிலிருந்து குடிபெயர்ந்து 14 நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள 2 லட்சத்து 80 ஆயிரம் பேர் இந்த தேர்தலில் வாக்களிக்க உள்ளனர். அவர்கள் தங்கியுள்ள நாடுகளில் சிறப்பு வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி அவுஸ்திரேலியாவில் நேற்றுமுன்தினம் ஈராக் தேர்தல் தொடங்கி விட்டது. சிட்னி நகரில் அமைக்கப்பட்டுள்ள ஒன்பது வாக்குச் சாவடிகளில் ஈராக் மக்கள் வாக்களித்து விட்டு கைகளில் அடையாளமையை வைத்துக் கொண்டுசென்றனர்.

இதேபோல ஜோர்டான் தலைநகர் அம்மானிலும் ஈராக் மக்கள் நேற்று முன்தினம் வாக்களித்தனர். சிரியா நாட்டில் தேர்தல் ஏற்பாடுகள் இன்னும் தொடங்கவில்லை.

## ஜாவோ ஜியாங்கின் உடல் நேற்று அடக்கம் மாணவர்களை அடக்க கடும் பாதுகாப்பு.

(பீஜிங்)

கடந்த 17ம் திகதி மரணமடைந்த சீன முன்னாள் பிரதமர் ஜாவோ ஜியாங்கின் உடல் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. மாணவர்கள் போராட்டம் நடத்தலாம் என்பதால், டினாமென் சதுக்கம், பல்கலைக்கழகங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

சீன முன்னாள் பிரதமர் ஜாவோ ஜியாங், கடந்த 17ம் திகதி, தனது 85 வயதில் மரணமடைந்தார். டினாமென் சதுக்கத்தில் மாணவர்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க எதிர்ப்பு தெரிவித்ததால், பிரதமர் பதவியை ஜாவோ இழந்தார். மேலும், ஆளும் சீன கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்படுத்த முயற்சித்ததாகவும் குற்றச்சாட்டுக்கு ஆளானார்.

கடந்த 15 ஆண்டுகளாக வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்த ஜாவோ, உடல் நலன் பாதித்து கோமா நிலையில் இருந்தார். கடந்த 17ம் திகதி மரணமடைந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் ஜாவோவின் உடல் உள்ளது. அவருடைய மரணம் மற்றும் இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகளுக்கு சீன பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் அதிக முக்கியத்துவம் அளிக்காமல் அடக்கி வாசித்து விட்டன.



மேலை நாடுகளில் தற்போது கடும் குளிர் நிலவுகிறது. மனிதர்கள் மட்டுமல்ல, செல்ல பிராணிகளும் இந்த குளிரில் அவதிப்படுகின்றன. பனி குவியல்களுக்கிடையே எளிதாக செல்ல வசதியாக நாய்களுக்கான சப்பாத்துக்களை ஜேர்மன் நாட்டு ஐடிபிக்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

## இந்தியர்களுக்கு செக் குடியரசு நஷ்டஈடு வழங்க வேண்டும்

### -ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம் உத்தரவு-

(பிரசல்ஸ்)

சட்ட விரோதமாகச் சிறையில் அடைக்கப்பட்ட இரண்டு இந்தியர்களுக்கு தலா ரூ.3,70,000 நஷ்டஈடாக வழங்கும்படி செக் குடியரசுக்கு ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தியாவைச் சேர்ந்தவர்கள் பல்பீர்சிங், பக்ஷீஸ் சிங். செக்குடியரசில் வசித்தனர். செக் குடியரசில் சட்ட விரோதமாக பலர் குடியேற இவர்கள் உதவி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது.இருவரையும் பொலிஸ் கைது செய்தது. நீதிமன்றம் அவர்களை 21 மாதங்கள் சிறையில் அடைக்க உத்தரவிட்டது.1996ல் இச்சம்பம் நடந்தது.

விடுதலைக்குப் பின், இவர்களை நாடு கடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கடவுச் சீட்டு போன்ற பயண ஆவணங்கள் அவர்களிடம் இல்லை.

எனவே, அவர்களை வெளியே விடாமல் தற்காப்பு நடவடிக்கையாக காவலில் வைத்தனர். இது 1998ல் நடந்தது. 2001, பெப்ரவரியில் விடுவிக்கப்பட்டு, நாடு கடத்தப்பட்டனர்.

## பாடசாலை சென்ற பேரூந்தில் நிர்வாணப்படம்; சாரதி கைது

(ஏதன்ஸ்)


பாடசாலைக்கு மாணவ, மாணவியரை அழைத்துச் செல்லும் பேரூந்தில் நிர்வாணப்படம் ஒளிபரப்பிய சாரதி மீது நடவடிக்கை எடுக்க பெற்றோர் வற்புறுத்தினர்.

கிரீஸ் நாட்டின் வட பகுதியில் கில்கிஸ் நகரம் உள்ளது. இங்கு பாடசாலைக்கு 15 வயதுக்கு உட்பட்ட மாணவ, மாணவியரை அழைத்து செல்லும் பஸ்சில் தொலைக்காட்சி உள்ளது. அதில், நிர்வாணப்படம் ஒளிபரப்பானது. அந்த சாரதி மீது நடவடிக்கை எடுக்க பெற்றோர் வற்புறுத்தினர்.

அந்த சாரதி கூறுகையில், நிர்வாணப்படம் பார்க்க விரும்புகிறீர்களா? என்று மாணவர்களிடம் கேட்டேன். அவர்கள் ஒட்டுமொத்தமாக சரி என்று சொன்னதால் ஒளிபரப்பினேன் என்றார்.

## ஈராக் தலைவர்கள் கேட்டுக் கொண்டால் அமெரிக்கப் படை வெளியேறும்

### -புஷ் கருத்து.-



(வொஷிங்டன்)

ஈராக்கில் இன்று நடைபெறும் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் புதிய தலைவர்கள் அமெரிக்கப் படை வெளியேற வேண்டும் என கேட்டுக் கொண்டால் அதை நாங்கள் உடனே நிறைவேற்றுவோம் என அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

நியுயோர்க் டைம்ஸ் பத்திரிகைக்கு ஜனாதிபதி புஷ் அளித்த பேட்டி:-

ஈராக் தேர்தலுக்கு பிறகும் அமெரிக்கப் படையினர் அங்கேயே தங்க வேண்டும் என அந்நாட்டு மக்கள் விரும்புகின்றனர். தீவிரவாதிகளை எதிர்த்துப் போரிட ஈராக் படையினர் பயிற்சி பெறும் வரை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் அங்கு இருக்க வேண்டும் என்பதை பெரும்பாலான ஈராக் தலைவர்கள் உணர்ந்துள்ளனர்.

தேர்தலுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்படும் புதிய தலைவர்கள் விரும்பினால், அமெரிக்கப் படையினர் அங்கே தங்கியிருப்பர். இதற்கு மாறாக சொந்தக் காலில் நிற்க வேண்டும் என அவர்கள் விரும்பினால், அமெரிக்கப் படை வெளியேற வேண்டும் என கேட்டுக் கொண்டால், அதை நாங்கள் கண்டிப்பாக நிறைவேற்றுவோம்.

அமெரிக்கப் படையினரை தங்களுக்கு உதவி செய்ய வந்தவர்கள் என ஈராக் மக்கள் நினைத்துள்ளனர். நாட்டை பிடிக்க வந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு கிடையாது. ஆனால், மற்றவர்கள் அமெரிக்கப் படையினரை நாட்டை பிடிக்க வந்தவர்கள் என்றே கூறுகின்றனர். இந்த போக்கை நான் உணர்ந்துள்ளேன்.

ஒரு கால கட்டம் வரை கூட்டுப் படையினர் மீது நாட்டை பிடிக்க வந்தவர்கள் என்ற பழிசுமத்தப்படும். பின்னர் அது மாறி விடும்.

ஈராக்கில் அமைதியாக உள்ள பகுதிகளை ஈராக் படையினரிடம் ஒப்படைக்கலாம் என்ற கருத்தை பிரிட்டன் பிரதமர் டோனி பிளேரும் கூறியுள்ளார். ஆனால், இந்தத் திட்டம் குறித்து நான் இன்னும் ஆலோசனை செய்யவில்லை.

## சீனாவில் சூதாட்டத்தில் ஈடுபட்ட பதினையாயிரம் பேர் கைது!

(பீஜிங்)

சூதாட்டத்துக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை சீன அரசு எடுத்து வருகிறது. சூதாட்டத்தில் ஈடுபட்ட 15 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி கடந்த 1949ம் ஆண்டு பதவிக்கு வந்ததும் சூதாட்டம், விபசாரம், போதை மருந்து ஆகியவற்றுக்கு தடை விதித்தது. ஆனால், மாகாண அரசுகள் அலட்சியமாக இருந்ததால் சீன மக்கள் தற்போது சூதாட்டத்தில் சிக்கித் தவித்து வருகின்றனர். ஆண்டு தோறும் 3,26,250 கோடி ரூபாய் சூதாட்டம் மூலமாக வெளிநாடுகளுக்கு செல்வதாக பீஜிங் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லாட்டரி ஆய்வு நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதையடுத்து கடந்த நவம்பர் மாதம் முதல் சட்ட விரோதமாக சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது சீன அரசு கடும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. எல்லைப் பகுதியில் உள்ள மாகாணங்களில் செயல்பட்டு வரும் சூதாட்ட கழகங்களுக்கு மின்சாரம், தண்ணீர் வழங்கல் துண்டிக்கப்பட்டது. சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள யூனான் மாகாணத்தில் 80 சூதாட்ட கழகங்கள் முடக்கி வைக்கப்பட்டன. கடந்த நவம்பர் மாதம் முதல் இதுவரை சூதாட்டத்தில் ஈடுபட்டதாக 15 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## நிவாரண நிதிக்காக இந்தி நடிகர்களின் உடைகள் ஏலம்.

(துபாய்)

இந்தி சினிமா உலகின் பாதுஷாவாக மட்டுமா ஷாருக்கான் விளங்குகிறார் நடிகர், நடிகைகள் அணிந்த உடைகளை ஏலம் விட்டதிலும் அவர் தான் முதலிடத்தைப் பிடித்துள்ளார். ஏலத்தில் ரூ.29.25 லட்சம் திரட்டப்பட்டது.

இந்தி சினிமா நடிகர், நடிகைகளுக்கு, சர்வதேச இந்தியத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா, டுபாயில் கடந்த வியாழக்கிழமை இரவு நடந்தது. அதன் ஒரு பகுதியாக, அவர்களுடைய உடைகள் ஏலம் விடப்பட்டன. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டும் நோக்கத்துடன், நடிகர், நடிகைகளின் உடைகள் ஏலம் விடப்பட்டன. பிரபல இந்தி நடிகர் ஷாருக்கான் உடை அதிகப்பட்சமாக ஏலம் போனது.

மெய்ன் ஹூான் நா என்ற படத்தில் ஷாருக் அணிந்த கவாலி உடை, அதிகப்பட்சமாக ரூ. 3. 9 லட்சத்திற்கு (30 ஆயிரம் திர்காம்) ஏலத்தில் எடுக்கப்பட்டது. முஜ்சே ஷாதி கரோகி படத்தில் சல்மான் கான் அணிந்த மூன்று குர்தாக்கள், மிகக் குறைந்தப்பட்சமாக 10 ஆயிரம் திர்காமுக்கு ஏலம் போனது.



குடியரசு தின விழாவை முன்னிட்டு வந்திருந்த மாணவ மாணவிகள் மற்றும் கலைஞர்கள் ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு விதம் விதமான பாரம்பரிய தொப்பிகளை அணிவித்தனர். அந்த மகிழ்ச்சிக் கடலில் கலாம்.




# ஹெவிட் அசத்தல் வெற்றி; இறுதிப் போட்டியில் சபினுடன் மோதல்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார் லேடன் ஹெவிட் நேற்று முன்தினம் நடந்த அரையிறுதிப் போட்டியில் இவர், ஆண்டி ரோடிக்கை வீழ்த்தினார். இறுதிப் போட்டியில் ஹெவிட், சபின் ஜோடிகள் மோதுகின்றனர்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடக்கிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நேற்று நடந்தது. இதில்



இரண்டாம் நிலை வீரரான அமெரிக்காவின் ஆண்டி ரோடிக், மூன்றாம் இடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியாவின் லேடன் ஹெவிட்டை சந்தித்தார்.

முதல் செட்டில் ரோடிக் ஆட்டம் அபாரமாக இருந்தது. இரண்டு முறை ஹெவிட் சேவீசை நிறுத்திய ரோடிக் 6க்கு3 என்ற முன்னிலையில் வெற்றி பெற்றார்.

# லாரா விளாசல் திணறியது பாகிஸ்தான்

(அடிலெய்ட்)

முத்தரப்பு தொடரில் நேற்று மேற்கிந்திய அணித் தலைவர் லாரா சதம் அடிக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணி பாகிஸ்தானை 58 ஓட்ட வித்தியாசத்தில் வீழ்த்தியது. நேற்று முன்தினம் அடிலெய்டில் நடந்த லீக் போட்டியில் பாகிஸ்தான், மேற்கிந்திய அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் தலைவர் இன்சமாம் தனது அணியை களத்துடுப்புக்கு தேரிவு செய்தார். மேற்கிந்திய அணி முதல் 11 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 56 ஓட்டங்களுடன் இருந்தது. அடுத்து வந்த சர்வான் முழங்கையில் காயம் ஏற்படவே உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். முதல் மூன்று வீரர்கள் வெளியேறிய நிலையில் அணித் தலைவர் லாரா, சந்திரபோல் ஜோடி சேர்ந்தனர்.

ஆரம்பத்தில் நிதானமாக ஆடிய லாரா அரைச்சதம் அடித்ததும் ஆட்டத்தின் வேகத்தை கூட்டினார். பவுண்டரி, சிக்சர்கள் என விளாசிய இவர் 117 பந்துகளில் தனது 19வது சதத்தை பூர்த்தி செய்தார். பாகிஸ்தானுக்கு எதிராக இவர் அடிக்கும் இரண்டாவது சதம் இது. மறுமுனையில் சந்திரபோல் நல்ல ஒத்துழைப்பு அளித்தார்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்கு 197 ஓட்டம் சேர்த்த நிலையில் சந்திரபோல் (85) ஆட்டமிழந்தார். சதம் அடித்த லாரா, அடுத்த 19 பந்துகளில் 150 ஓட்டங்களைக் கடந்தார். 5 சிக்சர், 12 பவுண்டரிகள் விளாசிய இவர் 156 ஓட்டம் எடுத்த நிலையில் ஆட்டமிளந்தார். 50 ஓவர்களில் மேற்கிந்திய அணி 4 விக்கெட் இழப்புக்கு 339 ஓட்டங்களைக் குவித்தது.

# ஐ.சி.சி. தரப்படுத்தலில் ராகுல் டிராவிட் முதலிடம்



(மும்பை)

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி. ,) முதன் முறையாக வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் ராகுல் டிராவிட் முதல் இடம் பெற்றுள்ளார்.

அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை மட்டுமே வெளியிட்டு வந்த ஐ. சி. சி. , முதன் முறையாக வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில், டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து சிறப்பாக ஆடி வரும் இந்தியாவின் ராகுல் டிராவிட் 882 புள்ளிகள் பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளார். சேவாக் (808), சச்சின் (778) முறையே 6,7வது இடங்களில் உள்ளனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியாவின் மெக்ராத் 866 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். முதல் பத்து இடங்களுக்குள் இந்தியாவின் சார்பில் அனில் கும்ளே (780) மட்டுமே இடம் பெற்றுள்ளார்.

இவருக்கு ஐந்தாம் இடம் கிடைத்துள்ளது. தவிர மிகச் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் வரிசையில் ஜக் கலிஸ் முதல் இடம் பிடித்துள்ளார். பிளின்டாப் (இங்கிலாந்து), பொலக் (தென்னாபிரிக்கா), சனத் ஜெயசூர்யா (இலங்கை), சமிந்தவாஸ் (இலங்கை) ஆகியோர் அடுத்த நான்கு இடங்களில் உள்ளனர்.

ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் துடுப்பாட்டத்தில் முதல் இடம் வகிக்கிறார். இதில் இந்தியாவின் வீரர் சச்சின் நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். பந்துவீச்சில் தென்னாபிரிக்காவின் ஷேன் பொலக் முதல் இடம் பெறுகிறார். முதல் பத்து இடங்களில் இந்திய வீரர்கள் யாரும் இடம் பெறவில்லை. அணிகள் வரிசையில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் இரண்டிலுமே அவுஸ்திரேலியா முதல் இடம் பெற்றுள்ளது.

மும்பையில் கபில்தேவ் லெவன் அணிக்கும் அமீர்கான் லெவன் அணிக்கும் இடையே கண்காட்சி கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இந்த போட்டியின் மூலம் கிடைத்த தொகை சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிய மக்களுக்கு நிவாரண நிதியாக வழங்கப்பட உள்ளது.



இந்த போட்டியை காண வந்த இந்திய கிரிக்கெட் அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர் சச்சின்டெண்டுல்கர் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகபட்டினத்தை சேர்ந்த குழந்தைகளுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

# நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போர் சுற்றாடலை சுத்தமாக வைத்திருங்கள்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களே! நீங்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையச் சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பது உங்களின் கடமையல்லவா? நீங்கள் உங்கள் வீட்டில் வசிக்கும் போது எவ்வாறு வீட்டையும், வீட்டுச் சூழலையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருக்கிறீர்களோ அதே போன்றே நீங்கள் எதிர்பாராத விதமாக கடல் அனர்த்தத்தால் உங்களது சொத்துக்களையும், சொந்தங்களையும் இழந்து நிர்க்கதியாகி வீதியில் நின்றபோது உங்களுக்கு அடைக்கலம் தந்த நலன்புரி நிலையங்களை தூய்மையாக வைத்திருந்தால் பாரிய தொற்று நோய்களில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் அல்லவா?

குறிப்பாக நீங்கள் தினமும் பாவிக்கும் மலசலகூடங்களை சுத்தமாக வைத்திருங்கள். அதாவது மலம், சிறுநீர் கழித்த பின்னர் நன்றாக நீரை அடித்து விடுங்கள். அத்துடன் மலசலகூடத்திற்குள் செல்லும் போது நீங்கள் பாவிக்கும் பாதணியில் மண் இருக்கும். எனவே பாதணியை நீர்விட்டு கழுவிய பின்னர் மலசலகூடத்துள் செல்லுங்கள் இதனால் மலசலகூடம் சுத்தமா இருக்கும்.

அடுத்து ஒவ்வொரு நாளும் சுகாதாரப் பகுதியினரிடம் தொற்று நீக்கியைப் பெற்று மலசலகூடத்தை தூய்மைப்படுத்துங்கள்.

நீங்கள் பாவிக்கும் கழிவுப் பொருட்களை கண்ட கண்ட இடங்களில் போடாது ஒரு இடத்தில் போட்டு வையுங்கள். பின்னர் மாநகர சபை ஊழியர்களின் உதவியுடன் அவற்றை அடிக்கடி அகற்றுங்கள். மேலும் நீங்கள் அணியும் ஆடைகளை கழுவிச் சுத்தமாக அணியுங்கள். இதனால் கடி, சிரங்கு என்பன ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த முடியும் அல்லவா?

இவற்றை நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்ற ஒவ்வொருவரும் அக்கறை எடுத்துச் செய்வதன் மூலமாக தொற்று நோய்களில் இருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளலாம் அல்லவா?

இதனால் நீங்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையச் சுற்றாடல் மாசுபடாமல் பாதுகாக்கப்படும் என்பதை கவனத்திற் கொண்டு செயற்படுங்கள் இது உங்களது ஆரோக்கிய வாழ்வுக்கு வழி வகுக்கும்.




இயற்கையின் கோரத்தாண்டவத்தால் அழிந்து போயுள்ள எமது துயரத்தில் இன்னலுற்றிருக்கும் எமது உறவுகளின் குரலிது.

எம்முறவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவசர மனிதாபிமானப் பணிகள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் என்பவற்றை தாங்கி தினமும் வெளிவருகின்றது.

நீங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், உடனடித் தேவைகள் என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும். மேலும் நீங்கள் எமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பும் தகவல்கள், தெரிவிக்க விரும்பும் செய்திகள் என்பவற்றையும் எமக்கு அறியத்தரலாம் முடிந்தவரை அவற்றை வெளிக்கொணர்ந்து தீர்வு காண முயற்சிப்போம்.

# இந்து ஆலயங்கள் பற்றிய தகவலை இந்து சமய கலாசார திணைக்களம் திரட்டுகிறது

சுனாமி ஆழிப்பேரலையினால் சேதமடைந்த் இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், அறநெறிப்பாடசாலைகள், இந்து சமய நூலகங்கள் தொடர்பான தகவல்களை இந்து சமய கலாசார திணைக்களம் சேகரித்து வருகின்றது.

மேற்படி சேதமடைந்த இந்து சமய அமைப்புக்கள் தொடர்பான தகவல்களைச் சம்மந்தப்பட்ட இந்து ஆலய நிர்வாக சபையினர் இந்து சமய நிறுவனங்களின் பொறுப்பாளர்கள், அறநெறிப்பாடசாலை அதிபர்கள், இந்து சமய நூலகங்களின் பொறுப்பாளர்கள் போன்றோர் தங்களது தகவல்களை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு வேண்டியுள்ளது.

தங்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களைப் பணிப்பாளர் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் காலி வீதி, கொழும்பு -4 என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது மாவட்ட செயலகங்களின் அரச அதிபர் ஊடாகவோ, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஊழியர்களுக்கோ உடனடியாக அனுப்பி வைக்குமாறு மேற்படி திணைக்களம் அறிவித்துள்ளது.

# வெள்ள அனர்த்தத்தால் சேதமடைந்துள்ள ஸ்ரீ கருமாரி அம்பாள் ஆலயத்தை புனரமைக்க வேண்டுகோள்

ஏறாவூர் 5ஆம் குறிச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ கருமாரி அம்பாள் ஆலயமானது 31.12.2004 அன்று தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளமானது ஆலயம் அமைந்துள்ள காணியில் அமைக்கப்பட்டிருக்கும் வடிகால் ஊடாக சுமார் 5 அடிக்கு மேல் வெள்ளம் பாய்ந்து ஆலயத்தின் மூன்று கட்டடங்கள் முற்றாக இடிந்து விழுந்துள்ளதைப் படத்தில் காண்க.

அத்துடன் இந்த வடிகால் ஏறாவூர் நகர்ப் பிரதேச சபைக்கு உரித்தானது. இதனைப் பிரதேச சபை அதிகாரிகள் கவனத்தில் கொள்ளாததுடன் கட்டிட நிர்மான வேலைகளைச் செய்வதற்கும் முன் வருவதில்லை. இது தொடர்பாக அறிவித்தால் புறக்கணித்து வருகின்றனர் என ஏறாவூர் 5ஆம் குறிச்சி ஸ்ரீ கருமாரி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையினர் ஈழநாதத்திற்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இதில் ஏறாவூர் நகர பிரதேசசபை அதிகாரிகள் கவனமெடுத்து இவ்வாலயத்தைப் புனரமைக்க முன்வரவேண்டும் என ஆலய பரிபாலன சபையினர் ஈழநாதத்தின் ஊடாக வேண்டுகோள் விடுக்கின்றனர். **ஆலய நிர்வாகம்**







## சிந்தனைக்கு



சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்க வேண்டும். செயல்தான் நாங்கள் செல்வாக்குப் பெற்றோம். செயல் தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM

பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.

மின்னஞ்சல் :- batti@eezhanatham.com
தொலைபேசி :- 065-2226110

30-01-2005

# மீண்டும் புகையும் ஜனாதிபதித் தேர்தல்

ஆழிப் பேரலை அனர்த்தம் ஊழித் தாண்டவமாடியதால் தணிந்திருந்த ஜனாதிபதித் தேர்தல் விவகாரம் இப்போது மீண்டும் புகையத் தொடங்கிவிட்டது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் இவ்வருடத்துடன் முடிவடையவிருப்பதால் அதற்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் இது எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வாதம்.

சுனாமிக்கு முன்னதான கால கட்டத்தில் இக்கருத்தை ஆளும் தரப்போ அல்லது ஜனாதிபதியோ விரும்பவில்லை. ஏன் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி கூட ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதை விரும்பவில்லை.

ஜனாதிபதி அவர்கள் கடந்த ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் ஒரு வருட முன்னதாக தேர்தல் நடத்தியிருந்ததன் காரணமாக 2005ம் ஆண்டில் தேர்தல் நடத்தப்படமாட்டாது என சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிடிவாதமாக நின்றது இதில் பிடி வாதமாக நின்றவர் ஜனாதிபதியின் சகோதரர் அனுரா பண்டார நாயக்காதான்.

தனது சகோதரியின் ஆட்சியை எவராலும் அசைக்க முடியாது இன்னும் பத்து வருடங்கள் இதே ஆட்சிதான் என்ற சோதிடமும் கூறியிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஜனாதிபதி தேர்தல் வருமானால் அரசியல் களத்தில் நல்லதொரு சூழலை ஏற்படுத்தும் எனக் கருதியது.

ஏன் எனில் ஒருவர் இரு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது. அந்த வகையில் சந்திரிக்கா அம்மணி மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் குதிக்க முடியாத நிலையில் இன்னுமொரு பண்டார நாயக்கா பரம் பரை ஆட்சியைப் பிடிக்கக் கூடிய செல்வாக்கு அரசியல் அரங்கில் இல்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் செல்வாக்கு மிக்க புள்ளி ஒன்றை தேர்ந்தெடுப்பதிலும் வெல்ல வைப்பதிலும் இன்றைய ஆளும் தரப்பு பலத்த சிரமப்பட வேண்டி ஏற்படும்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக களமிறங்கும் ரணில் விக்கிரம சிங்க நிட்சயம் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை அக்கட்சியினரிடையே உள்ளது. ஜனாதிபதியாகி விட்டால் இன்றைய ஆளும் அரசாங்கத்தை தமது கைக்குள் கொண்டு வர முடியும் எனப் பல்வேறு திட்டங்களுடன் தேர்தலுக்கான வலியுறுத்தல்களை விடுத்த போதும் ஆளும் தரப்பு அசையவில்லை.

திடீரெனச் சுனாமிப் பேரழிவு ஏற்பட்டதன் பிற்பாடு ஆளும் தரப்புக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான விரிசல் சற்றுக் குறைந்துள்ளதாக நோக்கப்டுகின்றது. நாடு பெரும் அழிவைச் சந்தித்துள்ள வேளை தேர்தல் ஒன்று அவசியம் தானா என்ற கேள்வி எழுப்பப்பட்டு அது ஒத்தி வைக்கப்படும் என முன்னதான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் கடந்த சில நாட்களுக்குள் அரசியல் அரங்கின் நகர்வுகள் தேர்தல் நடத்தப்படும் என்பதை வெளிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி அவர்கள் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படும் என தெரிவித்துள்ளார். இந்நிலையில் சுனாமிப் பேரழிவுகள் தமது சுயலாப அரசியல் போக்கினை இரு பிரதான கட்சிகளும் மேற்கொள்வதற்கு தயாராகி விட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்காவை அங்கீகரிக்கப்பட்ட வேட்பாளர் என்ற நிலையிலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யார் வேட்பாளர் என்ற வினா எழுப்பலுடன் உள்ளனர்.

இதுவரை காலமும் தெற்கில் சிங்கள இனவாதத்தையும் வடக்கு கிழக்கில் சமாதானத்தை வலியுறுத்தி வாக்கு வேட்டையாடிவாகை சூடியவர்கள் தற்போது இயற்கை அனர்த்தத்தில் இருந்து மீட்சி பெற வேண்டிய ஒரு புதிய சவாலுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இவை வெறுமையான தேர்தல் வாக்குறுதிகளாக அமையாது செயல் வடிவம் பெற வேண்டும். அதேவேளை யார் ஜனாதிபதியானாலும் தமிழினத்திற்கு புளித்த கஞ்சிதான்.

# ஆயிரம் அமெரிக்கப் படையினர் தாயகம் திரும்பியதாக தகவல்

(நமது நிருபர்)

இலங்கை வந்துள்ள அமெரிக்கப்படையின் ஆயிரம் படையினர் நாடுதிரும்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையில் நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக இங்கு வந்துள்ள அமெரிக்கப்படையினர்,

அவர்களின் பணிகளை முடித்துக்கொண்டு ஆயிரம் பேர் டுலத் எனும் அமெரிக்கக் கடற்படைக் கப்பலில் நாடு திரும்பியிருப்பதாக சிறிலங்கா படைத்தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நூற்றுக்கு மேற்பட்ட அமெரிக்கப்படையினர் இன்னமும் புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகச் சிறிலங்கா படையின் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு ஆயிரத்து அறுநூற்றி ஐம்பது அமெரிக்கப்படையினர் வருகை தந்திருப்பதாகவும், இவர்களில் சிலர் அடுத்த வருட இறுதிவரை இலங்கையில் தங்கியிருப்பார்களெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# கனடா அரசு பாதிப்புற்றோருக்கு பெரும் தொகை மருந்துப் பொருள்

(நமது நிருபர்)

கனடா அரசாங்கம் கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு பெருந் தொகையான மருந்துப் பொருள்களை வழங்கியுள்ளது.

கனடாவின் மருந்தாக்கத் தொழில் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சு வழங்கிய இந்த மருந்துப் பொருள்களை, சிறிலங்கா சுகாதாரத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் உத்தியோபூர்வமாகப் பெற்றுக்கொண்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மருந்துப் பொருள் கையளிப்பு நிகழ்வில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் வலேறியா றேய்மண்ட் மற்றும் சர்வதேச சுகாதார பங்காளிகள் நிறுவனத்தின் கனேடியப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கனடா வழங்கிய மருந்துப் பொருள்களின் பெறுமதி 9மில்லியன் கனேடிய டொலரெனத் தெரிவிக்கப் படுகிறது.

# இத்தாலி அரசினால் கிண்ணியாவில் தற்காலிக வைத்தியசாலை.

(நமதுநிருபர்)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட கிண்ணியா மாவட்ட வைத்தியசாலை மாஞ்சோலைசியாரக் காணியில் தற்காலிகமான வைத்தியசாலை ஒன்றினை இத்தாலி அரசாங்கத்தினர் அமைத்து மக்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இவ் வைத்தியசாலையில் குளிரூட்டப்பட்ட வசதிகள் அமைந்திருப்பதோடு இங்கு உள்நாட்டு வைத்தியர்களும் இத்தாலிய வைத்திய நிபுணர்களும் தொடர்ந்து கடமையில் ஈடபட்டு தினம் மக்களுக்கு விசேடமாக சிகிச்சை செய்து வருவதோடு பாதிக்கப்பட்டு சேதமடைந்த வைத்தியசாலைக்குப் பதிலாக நிரந்தரமான வைத்தியசாலை அமைப்பதற்கு இத்தாலி அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இதற்கான அனுமதியினை சுகாதாரத் திணைக்களத்திலிருந்து கிடைக்கப் பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட் மாவட்டத்திற்கு மேலும் அறுபதாயிரம் உணவு முத்திரைகள்

(டிலு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்காக மேலும் 60 ஆயிரம் நிவாரண முத்திரைகள் கிடைத்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.புண்ணியமூர்த்தி தெரிவித்தார். ஏற்கனவே 50 ஆயிரம் முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி நிவாரண முத்திரைகள் யாவும் பிரதேச செயலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மூலமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் எனவும் மேலதிக அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் ஜே.வி.பி வலியுறுத்துகின்றது

(நமது நிருபர்)

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் குறிப்பிட்ட காலத்தில் நடைபெற வேண்டுமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலைப் பிற்போடும் எந்தவிதமான தீர்மானத்திற்கும் தமது கட்சி ஆதரவு வழங்காதென ஜே.வி.பியின் அமைச்சர் கே.டி.லால் காந்த கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் கே.டி.லால் காந்த இவ்வாறு கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டையில் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்ட தீர்மானமானது அவருடைய சொந்தக் கருத்தெனவும், இது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தீர்மானம் இல்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் நடைபெற விருக்கும் ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவதானால் அனைத்துக் கட்சிகளும் கலந்து தீர்மானித்த பின்னரே இது குறித்து தீர்மானம் எடுக்க முடியுமென ஜே.வி.பியின் அமைச்சர் கே.டி..லால் காந்த மேலும் தெரிவித்துள்ளார்.

# கல்முனை பிரதேசத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பெற்றோரை இழப்பு

(நமது நிருபர்)

கல்முனைப் பிரதேசத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பெற்றோரை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்கோள் அனர்த்தத்தால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 2ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளதாகவும், கல்முனை வலயக்கல்விப் பிரதேசத்தில் ஆயிரம் மாணவர்கள் பெற்றோரை இழந்திருப்பதாகவும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் 38 மாணவர்கள் தாய், தந்தை இருவரையும் இழந்துள்ளதாகவும், 575 மாணவர்கள் தாய்மாரை இழந்திருப்பதாகவும் கல்வியமைச்சின் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிசாம் கூறியுள்ளார்.

கடற்கோள் அனர்த்தத்தால் ஐநூறு மாணவர்கள் தந்தைமாரை இழந்திருப்பதாகவும், ஏழாயிரத்து எண்ணூற்றி முப்பத்தி மூன்று மாணவர்கள் வீடுகளை இழந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அனர்த்தத்தால் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 85 பாடசாலைகளில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கவைக்கபட்டிருப்பதாக வடக்கு, கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

# மட். மாவட்டத்தில் 2840 பேர் பலி !

(டிலு)

கடந்த 21ம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையின் படி மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் சுனாமி அனர்த்தத்தினால் 2840 பேர் இறந்தும் 1027 பேர் காணாமல் போயுமுள்ளனர். 2395 பேர் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட 254868 பேர் கொண்ட 63717 குடும்பங்களில் இது வரை 45251 குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

# இலங்கையை மீளக் கட்டி எழுப்ப 3.5 மில்லியன் ரூபா தேவை

(நமது நிருபர்)

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு சிறிலங்கா அரசாங்கத்திற்கு 3.5மில்லியன் அமெரிக்க டொலர் தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் தொடர்பான இறுதி அறிக்கையிலேயே இந்தத் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட சேதவிபரங்கள், மீள்புனரமைப்பு மற்றும் இறுதி மேம்பாடுகள் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி, தொடரூந்துப் போக்குவரத்து, தொலைத்தொடர்பு, நீர்வடிகாலமைப்பு, துறைமுக அபிவிருத்தி, மீன்பிடித்துறை, மின்சாரத்துறை, சுகாதார சேவை ஆகிய துறைகள் உட்பட பல துறைகளுக்கு ஏற்பட்ட சேத விபரங்களும், இவற்றை மீண்டும் கட்டியமைப்பதற்கான தகவல்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# ஓய்வு பெற்ற பிரதேச செயலாளர்களை சுனாமியால் பாதிப்புற்ற பகுதிக்கு நியமிக்கவும்

(துஷி)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப் பட்ட தமிழ் மக்களுக்கு தேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு பிரதேச செய லகங்களில் கடமையாற்றும் பிரதேச செயலாளர்களுக்கு உதவியாக ஓய்வு பெற்ற உதவி பிரதேச செயலா ளர்களை நியமிக்க நடவடிக்கை எடு க்குமாறு அகில இலங்கை அர சாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ். லோகநாதன் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநா யக்காவுக்கு அவசர தொலைநகல் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட காரைதீவு, ஆலையடிவேம்பு, திருக் கோவில் போன்ற பிரதேச செயலகங் களில் உள்ள பிரதேச செயலாளர்க ளின் வேலைப்பழு அதிகரித்துள்ளது.

இவர்களுக்குத் துணையாக இப் பிரதேச செயலகங்களில் ஓய்வு பெற்ற உதவிப் பிரதேச செயலாளர் களை நியமிப்பதன் மூலம் இவர்களு டன் சேர்ந்து மக்களுடைய தேவை களை துரிதமாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும் எனவே உடனடியாக உதவிப் பிரதேச செயலாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு அத்தொ லைநகலில் அவர் கேட்டு அமைச் சின் செயலாளருக்கு தொலைநகல் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# வவுனியா பிரதேசத்தில் விவசாயச் செய்கை பாதிப்பு

(கபிலன்)

வவுனியாவில் விவசாய நிலப்பரப்புகளில் ஒரு விதநோய் ஏற் பட்டதன் காரணமாக நெற்பயிர்கள் எரிந்து நாசமாகிப்போயுள்ளன.

கூடுதலான மழை வீழ்ச் சியும் இம்முறை காணப்பட்டதால் நெல் விளைச்சல் சிறப்பாக இருக் கும் என எதிர்பார்க்கப்பட்ட போது அறுவடைக் காலம் நெருங்கும் வேளையில் இவ்வாறான நோய் ஏற்ப ட்டது விவசாயிகள் மத்தியில் கவ லையை உண்டு பண்ணியுள்ளது.

வவுனியா நகர்ப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் அனைத் திலும் இந்நோய் ஏற்பட்டுள்ளதுடன் இந்நோய் தொடர்பாக இதுவரை அறி யமுடியவில்லையென வவுனியா விவ சாயத் திணைக்கள அதிகாரிகள் தெரி விக்கின்றனர்.

இதனால் நெற்பதத்தில் உள்ள பயிர்களும் எரிந்து மடிந்து நிலத்தில் வீழ்ந்துள்ளதுடன் இந்நோய் மிக வேகமாக ஏனைய வயல்களு க்கும் பரவிவருகின்றது. அறுவடை செய்து வயல்களில் அடுக்கி (சூடு) வைத்தாலும் நெல் மணிகள் இல் லாது போகும் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# கெயார் நிறுவனத்தினரால் இடிபாடுகள் அகற்றல்

(நந்தபாலு)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தின் போது ஏற்பட்ட இடிபாடுகளை அகற்றும் பணியினை "கெயார்" நிறுவனத்தினர் கல்முனை தொடக்கம் பொத்துவில் வரை மேற் கொண்டு வருகின்றனர்.

அத்தோடு பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 11.500 ரூபா பெறுமதியான 83 வகையான நிவாரணப் பொருட்களை வழங்கவுள் ளதாகவும் எதிர் காலத்தில் மக்களு க்கு வீடு, மலசல கூடம், கிணறு போன்றன கட்டிக் கொடுக்கப்படவுள்ள தாகவும் திருக்கோவில் பிரதேசத்தின் தம்பட்டை கிராமத்தின் "கெயார்" நிறு வன கள உத்தியோகத்தர் பிரதாபன் தெரிவித்தார்.

# சித்தாண்டி முருகன் ஆலயத்தில் சர்வமத அனுஷ்டானம்

(ஏறாவூர் நிருபர்)

சுனாமி பேரலைத் தாக்கத்தி னால் உயிரிழந்தவர்களது ஆத்ம சாந்திக்காக கிழக்கு மாகாணத்தில் பிரசித்திபெற்ற சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி ஆலயத்தில் நேற் று சர்வமத அனுஷ்டானம் நடை பெற்றது.

வண்ணக்கர் ப. மயில்வா கனம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அருட்தந்தை யோசப் மேரி அடிகளார் சங்கைக்கு ரிய காதிநீதிபதி மௌலவி ரீ.எம்.எம். முகைதீன், சிவஸ்ரீ வசந்தகுமாரசாமி குருக்கள் ஆகியோர் கலந்துகொண்டு இரங்கலுரை நிகழ்த்தினர்.

கொம்மாதுறை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கெப்டன் விஜ யசிங்க, ஏறாவூர் பொலிஸ் இன்ஸ்பெ க்டர் எம்.விஜயபாலா மற்றும் குடும் பிமலைக் கோட்ட புலிகள் இயகக அரசியல்துறை பொறுப்பாளர் மற்றும் ஏராளமானோர் பிரசன்னமாயிருந்தனர்.

அறநெறிப் பாடசாலை மாணவர்கள் சுனாமி அனர்த் தத்தி னால் உயிரிழந்தவர்களது குடும்ப உறவினர்கள் ஏ்னப் பலரும் இந்நிக ழ்வில் கலந்து கொண்டனர்.

**அன்ரன்...**

தமிழினி, தமிழீழ விடுதலைப்புலிக ளின் மூத்த உறுப்பினர் க.வே.பால குமாரன், சோதியா படையணி சிறப் புத் தளபதி கேணல் துர்க்கா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் உட்பட பொறுப்பாளர்களும் போராளிகளும் வழியனுப்பி வைத்தனர்.

இன்று அதிகாலை கட்டு நாயக்காவில் இருந்து இலண்டன் நோக்கி பயணமாக உள்ளனர்.

கலாநிதி அன்ரன் பாலசி ங்கம் அவர்கள் கடந்த சில நாட்களு க்கு முன் முல்லைதீவுக்கு சென்று அங்கு ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுடன் கலந்துரை யாடல்களை மேற்கொண்டார்.

அங்கு மக்கள் எதிர் நோக் கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்ட றிந்தும் கொண்டார்.

**பட்டிருப்பு...**

பொது மைதானத்திற்கு வெளியேற்றி யமையினால் இங்கிருந்த மக்கள் தமக்கு நிவாரண பொருட்களாக கொடுக்கப்பட்ட பொதிகளையும், கைக் குழந்தைகளையும், தாங்கிய வாறு வீதியால் பயணம் செய்த செயல் மனவேதனை தரக் கூடியதெ னவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

**நிந்தவூர்...**

கப்பட்டது.

பின்னர் பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹாஷீம் அவர்களிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. அதில் தற்போது தற்காலிக் கூடாரத் தில் இயங்கிவரும் வைத்தியசா லையை பொருத்தமான இடம் ஒன்றி ற்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக் கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

**கல்முனை...**

தலாகப் பதிவான பாடசாலை மருத முனை ஷம்ஸ் வித்தியாலயம். இங்கு 93 மாணவர்கள் பலியாகியுள் ளனர். மருதமுனை புலவர்மணி ஷரிப் புத்தீன் வித்தியாலயத்தில் அதி கூடி ய மாணவர் காயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**நிவாரண...**

உயிரிழந்து உடைமையி ழந்தவனும், தண்ணீரே காணாதவ னும் 5000ரூபா, 2500 ரூபா மற்றும் ஏனைய சலுகைகளையும் ஒன்றாக பெறுவது அநீதியானது, பாரபட்ச மானது விரைவில் போராடுவோம் என்று கூறியுள்ளனர்.

## வேது பிறந்த தின வாழ்த்துக்கள்

30.01.1999



## இராஜேஸ்வரன் - கேந்திரப்பிரதாபன்

பழுகாமத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரன் மீனாட்சி தம் பதிகளின்ஏகபுத்திரன் கேந்திரப்பிரதாபன் தனது வேது பிறந்த நாளைஅவரது இல்லத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை விமர்சையாககொண்டாடுகிறார். இவரை ஐங்கரன் அருள்பெற்று பல்லாண்டுவாழ்கவென இவ ரது அன்புஅம்மா, அப்பா, ஐயப்பா, அம்மம்மா, அப்ப ம்மா,பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அக்காமார்,அண்ணா மார்,தங்கை, மச்சாள்மார்,மச்சான்மார் மற்றும்உற் றார் உறவினர்கள் வாழ்த்துகின்றார்கள்.

பழுகாமம்

TOPAZ LANKA MANPOWER RECRUITMENT
டொப்பஸ் லங்கா வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம்

Govt. Approved Manpower Recruiting Services, Air Ticketing, Travalagent.
அமெரிக்க நிறுவனத்தால் பராமரிக்கப்படும் சவுதிஅரேபியா, கட்டார் ஆகிய நாடுகளுக்கு வைத்தியசாலை சுத்திகரிப்பாளர்கள் தேவை 10 அல்லது 15 நாட்களில் பயணம். நேர் முகப்பரீட்சை மேற்குறிப்பிட்ட முகவரியில் நடைபெறும் கடவுச்சீட்டு நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும் 30.01.2005 தொடக்கம் வீசா கையிருப்பு உள்ளவரை நேர்முகப்பரீட்சை நடைபெறும். வீட்டுப் பணிப்பெண்களுக்கு ஒரு வாரத்தில் பயணம். கடவுச் சீட்டு, அடையாள அட்டையுடன் நேரில் வரவும். ஏற்கனவே வெளிநாடு சென்று வந்தவர்களுக்கு சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
Labour Licence No. 1303
அரச அனுமதி இல. 1303
Tel: 065-2241154
Fax: 065-2241154
E-mail: topzcom@sltnet.lk
No. 15, Main Street, Chenkalady. செல்லம் பட மாளிகைக்கு அருகில்